



RNI.TNTAM/2022/81857

# தகவல் எக்ஸ்பிரஸ்

ஊக்கமே தகவல் பரிமாற்றம் — தமிழ் மாத இதழ்

THAGAVAL EXPRESS TAMIL MONTHLY

@thagavalexpress · www.thagavalexpress.in · @thagavalexpress

ரூ.5/- Rs.5/-

thagavalexpress2021@gmail.com




| மலர்: 04 | இதழ் 04 | ஜூலை 2026 | ஆண்டு சந்தா:ரூ.50/– | சென்னை |
|---|---|---|---|---|
| Vol: 04 | Issue 04 | July 2026 | Annual Subscription: Rs.50/- | Chennai |

## அதிநவீன தாய்சேய் நல மையம்; பிரதமர் நரேந்திர மோடி திறந்தார்



சண்டிகரில் உள்ள முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் (றிநிமிவிணிஸி) 'மேம்பட்ட தாய் சேய் நல மையம்' மற்றும் 'மேம்பட்ட நரம்பியல் அறிவியல் மையம்' ஆகியவற்றை பிரதமர் திரு நரேந்திர மோடி திறந்து வைத்தார். மேலும், 'பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்புத் திட்டத்தின்' கீழ், 150 படுக்கை வசதிகள் கொண்ட அதிநவீன 'தீவிர சிகிச்சைப் பிரிவு' கட்டிடத்திற்கான அடிக்கல்லையும் அவர் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில் பஞ்சாப் ஆளுநரும் சண்டிகர் யூனியன் பிரதேசத்தின் நிர்வாகியுமான திரு குலாப் சந்த் கட்டாரியா, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு ஜகத் பிரகாஷ் நட்டா, மத்திய ரயில்வே துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் மற்றும் சண்டிகர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு மணீஷ் திவாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், அதிநவீன மருத்துவ வசதிகளின் துவக்கம் மற்றும் அதற்கான அடிக்கல் நாட்டல் ஆகியவை, லட்சக்கணக்கான மக்களுக்குத் தரமான மருத்துவச் சேவைகள் கிடைப்பதை கணிசமாக வலுப்படுத்தும் என்று கூறினார்.

மக்களின் தொடர் பங்களிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய பிரதமர், "தூய்மை என்பது ஒரு நாள் செயல்பாடு அல்ல; அது ஒரு வாழ்க்கை முறை," என்று குறிப்பிட்டார்.

"தூய்மை பாரதம்" முன்முயற்சியின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்புத் தூய்மைப் பணியைப் பாராட்டிய அவர், நோய்த்தடுப்பில் இத்தகைய பிரச்சாரங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன என்று குறிப்பிட்டார்.

"12 ஆண்டுகளுக்கு முன், சுகாதார வசதிகள் இல்லாததால் எந்தவொரு குடிமகனும் பாதிக்கப்படக்கூடாது என்றும், தரமான சிகிச்சை மலிவு விலையில் கிடைக்க வேண்டும் என்றும் நாங்கள் உறுதி மேற்கொண்டோம். கடந்த 12 ஆண்டுகளில் எட்டப்பட்ட சாதனைகள் இந்த உறுதிப்பாட்டின் விளைவே ஆகும்", என்று பிரதமர் கூறினார்.

## முதல்வரின் கர்நாடக பயணத்துக்கு

# அனைத்து கட்சி எதிர்ப்பு



சென்னை: கர்நாடக முதல்வரை காவிரி பிரச்சனை தொடர்பாக நேரில் சந்தித்து பேச, தமிழக முதல்வர் விஜய் திட்டமிட்டிருப்பதாக செய்திகள் கசிந்தவண்ணம் உள்ளன.. ஆனால், இந்த சந்திப்பை தவிர்க்க வேண்டும் என்று திமுக தலைவர் மு.க. ஸ்டாலின், பாமக தலைவர் அன்புமணி, நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்ட தலைவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள்.. இப்படிப்பட்ட சூழலில்தான் நமக்கு ஒரு எக்ஸ்க்ளூசிவ் தகவல் கிடைத்துள்ளது.

காவிரி நதியின் அருகே கர்நாடக அரசு மேகேதாட்டு எனும் இடத்தில் அணைக் கட்டுதல், காவிரி நீரை முறைப்படி திறந்து விட மறுத்தல் உள்ளிட்ட சிக்கல்களுக்கு தீர்வு கணும் பொறுட்டு கர்நாடக முதல்வர் சிவக்குமாரை சந்திக்க ஆகஸ்ட் 3தேதி பெங்களூர் செல்ல முதல்வர் விஜய் திட்டமிட்டிருந்தார். அதாவது, சிவக்குமாரின் அழைப்பை ஏற்று கர்நாடகாவுக்கு விஜய் பயணப்படுவதாக சொல்லப்பட்டது.

கர்நாடகா காவிரி பிரச்சனை 1980களில் நிலவிய கடுமையான வறட்சியின்போது அப்போதைய முதல்வர் எம்ஜிஆர், கர்நாடக முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழகத்திற்கு தேவையான தண்ணீரைப் பெற்றார். அந்த வரலாற்று நிகழ்வை நினைவுகூரும் வகையில், நீண்ட இடைவெளிக்கு பிறகு தமிழக முதல்வர் ஒருவர் நேரடியாக கர்நாடகா சென்று பேச்சுவார்த்தை நடத்த போவதாக கூறப்பட்டது, அரசியல் கவனத்தையும் பெற்றது.

ஆனால் விஜய்யின் இந்த பயணத்திற்குத் தமிழகத்தில் ஆரம்பத்திலிருந்தே எதிர்ப்புகள் கிளம்பின. கர்நாடக முதல்வரை நேரில் சந்தித்து பேசுவதால் காவிரிப் பிரச்சினையில் எந்த தீர்வும் கிடைக்காது என்றும், அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி விவாதிப்பதுதான் இப்போதைய தேவை என்றும் சொல்லி வருகின்றன. பெங்களூரு செல்கிறாரா விஜய் அத்துடன் இந்த சந்திப்பைத் தவிர்க்க வேண்டும் என்று திமுக தலைவர் ஸ்டாலின், பாமக தலைவர் அன்புமணி, நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்ட தலைவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். தமிழக அரசியல் கட்சிகளையும் தாண்டி, விவசாய அமைப்புகளும் இந்த பயணத்தை எதிர்த்து வருகின்றன.

இதற்கு நடுவில், கர்நாடகாவிலும் இந்த சந்திப்புக்கு எதிர்ப்புகள் உருவெடுத்துள்ளன... மாண்டியாவில் விஜய் நடித்த "ஜனநாயகன்" படம் திரையிடப்பட்ட தியேட்டரில் ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்களை கன்னட அமைப்பினர் கிழித்தெறிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.. இதனால் கர்நாடகா தமிழக எல்லையில் பதற்றம் தொற்றிக்கொண்டுள்ளது.

அன்புமணி ராமதாஸ் சொன்னது என்ன இப்படிப்பட்ட சூழலில்தான், நமக்கு ஒரு எக்ஸ்க்ளூசிவ் தகவல் கிடைத்துள்ளது.. அதாவது, அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி, விவாதித்து அதில் நிறைவேற்றப்படும் தீர்மானத்தை கர்நாடக அரசுக்கு அனுப்பி வைக்கலாம் என்றும் அதுவரை கர்நாடகவுக்கு பயணம் மேற்கொள்வதை தவிருங்கள் என்றும் பாமக தலைவர் அன்புமணி, முதல்வர் விஜய்க்கு தகவல் பாஸ் பண்ணியிருக்கிறாராம்.

அதேபோல, ஆதவ் அர்ஜுனாவிடமும் திருமாவளவன் பேசியிருக்கிறார்.. "காவிரி நதி நீர் பிரச்சனை எதுவாக இருந்தாலும் அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டி அதன்படி முடிவை எடுப்பது கர்நாடகாவின் வழக்கம். காவிரி பிரச்சனையில் கர்நாடக அரசியல் கட்சிகளும் விவசாய சங்கங்களும் தங்களின் ஒற்றுமையை நிரூபிக்கின்றன. அதுபோல ஒற்றுமையை தமிழகமும் காட்டினால்தான் முதல்வருக்கு பெருமை. இதனை முதல்வரிடம் நீங்களே சொல்லுங்கள்" என்று சொன்னாராம். எதிர்க்கட்சிகள் அல்லாமல் கூட்டணியில் உள்ள கட்சிகளும், இப்படி வலியுறுத்துவதால் திட்டமிட்டபடி ஆகஸ்ட் 3ந்தேதி பெங்களூருக்கு விஜய் செல்வது தள்ளி வைக்கப்படலாம் என்கிறார்கள் தவெக ஆதரவு கட்சிகள்.

ஒருவேளை, பெங்களூருக்கு விஜய் உறுதியாக செல்லும்பட்சத்தில், அவருக்கு கருப்பு கொடி காட்ட பெங்களூரில் சில அமைப்புகள் திட்டமிடுவதாக, உளவுத்துறை மோப்பம் பிடித்துள்ளது..

இந்த விஷயத்தை முதல்வரின் அரசியல் ஆலோசகர் ஜான் ஆரோக்கியசாமியிடமே உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.. இப்படி நாலாபக்கமும் தகவல்கள் பரபரப்பதால், பெங்களூர் பயணத்தை விஜய் ஒத்தி வைக்கலாம் என்று கோட்டை வட்டாரத்தில் கூறப்படுகிறது.. ஆனால், இப்போது வரை இறுதி முடிவை விஜய் எடுக்கவில்லையாம்...!!






## தலையங்கம்

### தகவல் எக்ஸ்பிரஸ்

ஜூலை 2026

## முடிவுக்கு வருமா?

தமிழ்நாட்டிற்கும் கர்நாடகாவிற்கும் இடையே காவிரி நதிநீர் பிரச்சனை முடிவுபெறாமல் காவிரி நீர்போல் நீண்ட தூரம் பயணித்துக் கொண்டிருக்கிறது. கர்நாடகா - தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களுக்கும் இடையிலான காவிரி ஆற்றின் நீளம் 805 கிலோ மீட்டர். குடகு மலையின் உச்சியில் பிறந்து அங்கிருந்து பாய்ந்து தமிழக எல்லைக்குள் நுழைந்து வழிநெடுக உள்ள பயிர்களுக்கு உயிர் கொடுத்துவிட்டு சென்று கொண்டிருந்தது இந்த காவிரி நீர். கடைசியாக கொள்ளிடக்கரையில் தனது பயணத்தை முடித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் தமிழ்நாட்டில் நல் விளைச்சலை கண்ட கர்நாடகா தனது மாநிலத்தின் விளைச்சலை அதிக மாக்க கருதி அணை கட்டு திட்டத்தை கையில் எடுத்தது. இதனால் தமிழக விவசாயிகள் மிகவும் வேதனையடைந்தனர். காவிரி மேலாண்மை வாரிய உத்தரவின்படி ஆண்டுதோறும் தமிழகத்திற்கு 177.25 டி.எம்.சி. தண்ணீரை வழங்க வேண்டும்.

ஆனால் அந்த அளவு தண்ணீரை கர்நாடக அரசு இதுவரை வழங்கியதே கிடையாது. இதனால் தமிழகத்தில் குறுவை சாகுபடி பொய்த்துப் போகும் நிலை வந்து கொண்டிருக்கிறது. விளை நிலங்கள் அனைத்தும் விலை நிலங்களாக மாறிக் கொண்டிருக்கிறது.

விவசாயம் செய்து வந்தவர்கள் கட்டிடத் தொழில் செய்யும் அளவுக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறுவதில்லை என்பதுபோல் காவிரி நதிநீர் பகிர்வு விவகாரம் தீர்ந்தபாடில்லை.

ஆனால் இப்போது இரு திராவிட கட்சிகளை கடந்து புதிதாக தவெக அரசு ஆட்சி அமைத்துள்ளது. காவிரி விவகாரத்தை இப்போது இந்த அரசு கையில் எடுத்துள்ளது. எம்.ஜி.ஆர்., கருணாநிதிக்கு பிறகு கர்நாடக மாநிலத்திற்கு சென்று இந்த விவகாரம் தொடர்பாக பேசுவதற்கு தமிழக முதல்வர் விஜய் முன் வந்துள்ளார்.

விஷயம் இப்படி இருக்க இனியாவது காவிரி நதிநீர் விவகாரம் முடிவுக்கு வருமா? மீண்டும் விவசாயத்தை தொடர்வோமா? என்ற ஏக்கம் விவசாயத்தை துறந்து ஆங்காங்கே கூலிவேலை செய்துகொண்டிருக்கும் மக்கள் மத்தியில் ஏக்கம் குடிகொண்டுள்ளது.

இதனை மனதில் கொண்டு ஆகஸ்டு மாதம் கர்நாடக மாநிலம் செல்லும் தமிழக முதல்வர் தீர்க்கமான ஒரு முடிவை எட்டும் வகையில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று சமூக ஆர்வலர்களும், விவசாய பிரதி நிதிகளும் வேண்டுகோள் வைத்துள்ளனர்.

# ஆங்கிலேயர் ஆட்சி முதல் மக்களாட்சி வரை முடிவுக்கு வராத காவிரி விவகாரம்

## எம்.ஜி.ஆர்., கருணாநிதிக்கு பின் கர்நாடகா செல்லும் முதல்வர் விஜய்



கர்நாடகா - தமிழ்நாடு ஆகிய இருமாநிலங்களுக்கு இடையே பாயும் காவிரி ஆறு 805 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. கர்நாடகாவில் உற்பத்தியாகி அந்த மாநிலத்தில் 320 கி.மீ. நீளமும், தமிழ்நாட்டில் 461 கி.மீ. தூரமும், இருமாநில எல்லையில் 24 கி.மீ. நீளமும் பயணித்து இறுதியாக மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகாரில் வங்கக்கடலில் கலக்கிறது.

தமிழக கர்நாடாக இடையே காவிரி நதிநீர் பிரச்சினை ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலேயே தொடங்கிவிட்டது. இரு மாநிலங்களுக்கும் இடையே நதிநீர் பங்கீடு தொடர்பாக 1892 மற்றும் 1924ம் ஆண்டுகளிலேயே ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. சென்னை மாகாணம் - மைசூர் சமஸ்தானம் இடையே 50 ஆண்டு கால ஒப்பந்தம் கையெழுத்தானது.



ஆனால், இந்த ஒப்பந்தம் 1974ம் ஆண்டு காலாவதியான பிறகு, நவீன கால பிரச்சினையாக மீண்டும் உருவெடுத்தது. அதன்பிறகு, தமிழக முதல் அமைச்சர்களாக இருந்த கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோர் சட்டப் போராட்டம் நடத்தியதன் விளைவாக, ஆண்டுதோறும் தமிழகத்திற்கு 177.25 டி.எம்.சி. தண்ணீரை வழங்க வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது. கோர்ட்டு உத்தரவுப்படி, தமிழகத்திற்கு உரிய நீர் கிடைப்பதை உறுதி செய்வதற்காக காவிரி மேலாண்மைம், காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

கர்நாடகாவில் காவிரி ஆற்றின் குறுக்கே ஹேரங்கி, ஹேமாவதி, கபினி, கிருஷ்ணராஜசாகர் ஆகிய 4 அணைகளும், தமிழ்நாட்டில் மேட்டூர், கல்லணை, முக்கொம்பு ஆகிய 3 அணைகளும் இருக்கின்றன. தற்போது, கர்நாடக முதல்வராக உள்ள டி.கே. சிவக்குமாரின் சொந்தத் தொகுதியான கனகபுராவில்தான் மேகதாது வருகிறது. எனவே, காவிரியின் குறுக்கே எப்படியும் 5 வது அணையை கட்டிவிட வேண்டும் என்று அவர் முயற்சி மேற்கொண்டு வருகிறார்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு கர்நாடகா இடையே மேகதாது பிரச்சினை மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில், ஆகஸ்டு 3ந் தேதி தமிழக முதல்அமைச்சர் ஜோசப் விஜய், கர்நாடக முதல்வர் டி.கே. சிவக் குமாரை பெங்களூருவில் சந்தித்து பேச இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. ஆனால், இந்த சந்திப்புக்கு முதல் அமைச்சர் ஜோசப் விஜய் செல்லக்கூடாது என தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். தமிழக விவசாயிகளும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். பதிலுக்கு கர்நாடகாவிலும் சில எதிர்க்கட்சிகளும், விவசாய அமைப்புகளும் போராட்டத்தில் குதித்து இருக்கின்றன. இதனால், தமிழ்நாடு கர்நாடகா எல்லையான ஓசூர் பகுதியில் பதற்றம் நிலவிவருகிறது. கர்நாடகாவில் 2028ம் ஆண்டு சட்டசபை தேர்தல் வர உள்ளது. எனவே, அதை முன்வைத்தே கர்நாடக முதல்வர் டி.கே.சிவக்குமார் மேகதாது அணை கட்டும் முயற்சியை தொடங்கியுள்ளதாக கூறப்படுகிறது. அதே நேரத்தில், நாடாளுமன்ற மாநிலங்களவையில் மத்திய இணை மந்திரி ராஜ் பூஷண் சவுத்ரி, மேகதாது அணை கட்டும் விவகாரத்தில் கர்நாடகாவுக்கு ஆதரவாக கருத்து கூறியிருப்பதும், பா.ஜ.க. கர்நாடகாவில் தங்களுக்கான ஆதரவை பெருக்கிக்கொள்வதற்கே என்றும் தெரிகிறது. ஏற்கனவே, காவிரி பிரச்சினை தொடர்பாக, தமிழக முதல் அமைச்சராக எம்.ஜி.ஆர். இருந்தபோது, கர்நாடகா முதல்மந்திரிகள் ராமகிருஷ்ண ஹெக்டே, குண்டு ராவ் ஆகியோரை சந்தித்து பேசியிருக்கிறார்.

இதேபோல், 1997ம் ஆண்டு தமிழக முதல் அமைச்சராக இருந்த கருணாநிதி, கர்நாடக முதல்மந்திரியாக இருந்த ஜே.எச்.பட்டீலை சந்தித்து பேசினார். 2012ம் ஆண்டு தமிழக முதல்அமைச்சராக இருந்த ஜெயலலிதா, கர்நாடக முதல்மந்திரி ஜெகதீஷ் ஷெட்டரை சந்தித்து பேசினார். ஆனால், இதுபோன்ற சந்திப்புகளில் எந்தவித சுமூகமான முடிவும் எட்டப்படவில்லை.

இதுபோன்ற நிலையில், தமிழக முதல் அமைச்சர் ஜோசப் விஜய் கர்நாடக முதல்மந்திரி டி.கே.சிவக்குமாரை சந்தித்து பேசுவதில் சுமூக முடிவு எட்டப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

# திமுக கட்சி சீரமைப்பை தள்ளிப்போவது ஏன்?

சட்டசபைத் தேர்தல் தோல்வி காரணமாக திமுகவில் மேற்கொள்ள விருந்த பல்வேறு முக்கிய மறு சீரமைப்பு நடவடிக்கைகளை ஒத்தி வைக்க மு.க.ஸ்டாலின் முடிவு செய் துள்ளார்

தமிழ்நாட்டின் சட்டமன்ற தேர்தல் முடிவுகளால் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்ட கட்சியாக இருப்பது திமுக. மீண்டும் ஆட்சியைப் பிடிக்கலாம் என்ற எண்ணத்தில் இருந்த திமுகவிற்கு தவெக பேரிடியை அளித்தது. குறிப்பாக, திமுக தலைவரும் முன்னாள் முதல மைச்சருமான மு.க.ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் தோல்வி அடைந்தார்.




திமுகவின் இந்த தோல்விக்கு விஜய் மீதான மிகப்பெரிய எதிர் பார்ப்பு மட்டுமின்றி திமுகவின் மூத்த தலைவர்கள் பலரும் தேர்தல் பணிகளை முறையாக செய்யா ததும், உட்கட்சி மோதலும் முக்கிய காரணம் ஆகும். இதன் தாக்கமே வெற்றி பெறுவார்கள் என்று எதிர்பார்த்த பல இடங்களில் திமுக தோல்வி அடைந்ததற்கு காரணமாக அமைந்தது.

இந்த நிலையில், திமுகவை தோல்விக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அடுத்த தலைமுறைக்கான கட்சியாக திமுக வை மாற்ற திமுக மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மு.க.ஸ்டாலின் கையில் எடுத்தார். இதற்கான பணிகள் மும்முரமாக நடந்த நிலையிலும், மு.க.ஸ்டாலினிடம் 20 மாவட்டச் செயலாளர்கள்மீதுநடவடிக்கைஎடுக்க மறுசீரமைப்புக் குழு பரிந்துரைத்த நிலையிலும் மு.க.ஸ்டாலின் முக்கிய முடிவை எடுத்துள்ளதாக தகவல்கள் வெளியா கியுள்ளது.

அதாவது, மறுசீரமைப்பு நடவடி க்கையை தற்போது மு.க.ஸ்டாலின் ஒத்திவைத்துள்ளதாக கூறப்படு கிறது. தமிழ்நாட்டில் இன்னும் சில மாதங்களில் இடைத்தேர்தல் மற்றும் உள்ளாட்சித் தேர்தல் நடை பெற உள்ளது. இந்த சூழலில், மறுசீரமைப்பு நடவடிக்கையை மேற்கொண்டு பல அதிகாரமிகுந்த மாவட்டச் செயலாளர்களை மாற்றி னால் அதன் தாக்கம் தேர்தலில் எதிரொலிக்கும் என்று மு.க.ஸ்டாலின் தயக்கம் காட்டி வருகிறார்.

உள்ளாட்சி அளவில் கட்சி ரீதியாக திமுக வலுவாக உள்ள நிலையில், தவெக ஆளுங்கட்சியாக இருப்பதால் இந்த தேர்தலில் திமுகவிற்கு சவால் வலுவாக இருக்கும் என்று கருதப்படுகிறது. இந்த சூழலில், இவர்களை முக்கிய நிர்வாகிகளிடம் இருந்து பொறுப்புகளை பறித்தால் திமுகவின் வெற்றியை அதுகடுமையாக பாதிக்கும் என்றும், உள்ளாட்சித் தேர்தலில் ஆளுங்கட்சியிடம் வெற்றியை பறிகொடுத்தால் அது திமுகவை மேலும் பாதிப்படையச் செய்யும் என்றும் கூறப்படுகிறது.

இதனால், உள்ளாட்சித் தேர்தல் முடியும் வரை திமுகவின் மறுசீர மைப்பு நடவடிக்கைகள் ஏதும் எடுக்காமல் இருக்க மு.க.ஸ்டாலின் முடிவு செய்துள்ளார். அதேசமயம், உதயநிதி ஸ்டாலின் கட்சியில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆர்வமாக உள்ளார். தேர்தலில் முறையாக பணியாற்றாத பலரையும், சீனியர்கள் பலரையும் ஓரங்கட்டவும் உதயநிதி மிகுந்த ஆர்வத்துடன் உள்ளார்.

தங்களது மாவட்டச் செயலாளர் கள் பறிபோகும் என்ற பீதியிலும், மாவட்டச் செயலாளர்கள் பலரது அதிகாரத்தை 3 தொகுதிகளாக குறைக்கவும் வெளியாகியிருக்கும் முடிவால் சேகர்பாபு உள்ளிட்ட முன் னாள் அமைச்சர்கள் பலரும் பீதியில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

# சமூக நீதிக்கு எதிராகத் தவெக அரசு! திராவிட இயக்கத் தமிழர் பேரவை கண்டனம்!

திராவிட இயக்கத் தமிழர் பேவை தலைவர் சுப.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், நீட் தேர்வை எதிர்த்தும், EWS பிரிவினருக்கு வழங்கப் படும் இட ஒதுக்கீடு என்னும் சமூக அநீதியை எதிர்த்தும், திராவிடர் கழகம் நாடு முழுவதும் நடத்தவிருந்த இருசக்கர வாகனப் பேரணிக்கு முதலமைச்சர் விஜய் தலைமையிலான



தமிழ்நாடு அரசு தடை விதித்துள்ளது.

பெரியார் அம்பேத்கரைக் கொள்கைத் தலைவர்கள் என்று தாங்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும், நீட் தேர்வைத் தங்கள் கட்சி எதிர்ப்பதாகவும் கூறு தவெகவின் ஆட்சியில் வெளிப்பட்டுள்ள இந்த சர்வாதிகாரப் போக்கு மிகு கண்டனத்திற்குரியது!

ஆசிரியர் தன் அறிக்கையில் கூறியுள்ள படி, சமூக நீதியில் கை வைப்பதும் சமூக விரோதச் செயலே ஆகும்!

கடந்த 17ஆம் தேதியே அனுமதி கேட்டுக் கடிதம் அனுப்பியிருந்தும், இன் காலை சட்டென்று அப்பேரணிக்குத் தடை விதிப்பது எவ்விதத்திலும் ஜனநாயகம் ஆகாது!

தமிழ்நாட்டில் நடப்பது தவெக ஆட்சியா அல்லது பாஜக ஆட்சியா? என்று குறிப்பிட்டுள்ளார்.

## டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி பிறந்த தினம்

இந்தியாவின் முதல் பெண் மருத்துவர்களுள் ஒருவரான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் பிறந்தநாளை (ஜூலை 30) முன்னிட்டு, தமிழக அரசு மருத்துவமனைகளில் ஆண்டுதோறும் 'மருத்துவமனை தினம்' சிறப்புக் நாளாகக் கொண் டாடப்பட்டது. சமூக சீர்திருத்தவாதியாகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், அடையாறு புற்றுநோய் மருத்துவமனையை நிறுவியவராகவும் தடம் பதித்த



அவரது சேவையைப் போற்றும் வகையில் இந்நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

மருத்துவமனைகளின் சாதனைகள், நவீன மருத்துவ வசதிகள் மற்றும் உயிர்காக்கும் சிகிச் சைகள் குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத் துவதும்; மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத் துவமனை ஊழியர்களின் சேவையைப் பாராட்டி ஊக்குவிப்பதுமே இந்நாளின் பிரதான நோக்கமாகும். ஏழை எளிய மக்களுக்குத் தங்குதடையின்றி மருத்துவச் சேவை வழங்கி வரும் அரசு மருத்துவமனைகளின் பங்களிப்பை நினைவுகூர்ந்து கொண்டாடும் நாளாக இது திகழ்கிறது.

## தேர்வு முறைகேடுக்கு 10 ஆண்டு சிறை; ரூ.10 கோடி அபராதம்- மக்களவையில் மசோதா

புதுடெல்லி:

எதிர்க்கட்சியினரின் தொடர் எதிர்ப்புகளுக்கு மத்தி யில் பொதுத்தேர்வு முறைகேடு தடுப்பு மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

நீட் தேர்வு வினாத்தாள் கசிவு, முறைகேடு உள்ளிட் டவையால் மாணவர்கள் தற்கொலைக்கு பஞ் சமில்லாமல் உள்ளது.

தற்போது நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில் டெல்லி ஜந்தர்மந்தரில் மாணவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டிற்கு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா தான் காரணம் என மக்களவையில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டினார். இதனால் கூச்சல் குழப்பம் எழுந்தது.

இதற்கிடையே மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் மசோதா ஒன்றை தாக்கல் செய்தார். அதில் வினாத்தாள் கசிவு மற்றும் முறைகேடுகளைத் தடுக்க கடுமையான சிறைத்தண்டனை மற்றும் அபராதங்களை இந்த மசோதா வழங்குகிறது. பொதுத் தேர்வு முறைகேடுகளில் ஈடுபடும் தனிநபர்களுக்கு 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும், ரூ.50 லட்சம் வரை அபராதமும், வினாத்தாள் கசிவு மற்றும் கூட்டுச் சதியில் ஈடுபடுவோருக்கு ரூ.10 கோடி வரை அபராதமும் விதிக்க இந்த மசோதா வழிசெய்கிறது என்றார்.

# 19.34 லட்சம் உறுப்பினர்களை கடந்த அண்ணாமலையின் We the leader ...

பாஜகவில் தமிழ்நாடு மாநிலத்தலைவராக இருந்த அண்ணாமலை அக்கட்சியில் இருந்து விலகி We the leader இயக்கத்தை தொடங்கி செயல்படுத்தி வருகிறார். இந்த நிலையில், We the leader இயக்கத்தில் 19.34 லட்சத்தை கடந்துள்ளது. தொடர்ந்து உறுப்பினர் சேர்க்கை தொடர்கிறது. http://wetheleader.org என்ற இணையதளத்தில் தங்கள் பெயர், மொபைல் எண்ணை பதிவு செய்து பலர் உறுப்பினர்களாக இணைந்து வருகின்றனர்.

பிளே ஸ்டோர் அல்லது ஆப் ஸ்டோரில் வீத லீடர்ஸ் என டைப் செய்து செயலியை பதிவிறக்கம் செய்யப்படுகிறது. ஏற்கனவே வலைதளம் மூலம் இணைத்தவர்கள் சைனின் பட்டன் வழியாகவும் புதிதாக இணைபவர்கள். join பட்டன் வழியாகவும் நுழையலாம். இந்த இரண்டு நிலைகளிலும் மொபைல் நம்பர் பதிவு செய்தியை உறுதிப்படுத்தியதும்.



Verify பட்டனை அழுத்தவும் புதிதாக இணைபவர்கள் கூடுதலாக அடுத்து வரும் பக்கத்தில் தங்களின் பிறந்த தேதி, மாநிலம், சட்டமன்ற தொகுதி போன்ற சுய விவரங்களையும் அளித்துContinueபட்டனை அழுத்திசெல்கின்றனர். இனிஷியல் சர்வை பக்கமானது திறக்கும். அங்கு அடிமட்ட தலைவராக செயல்பட விருப்பமா, தலைமை துவப் பயிற்சியில் பங்கேற்க விருப்பமா, உள்ளாட்சித் தேர்தல் உட்பட பொதுத்தலைமை பொறுப்பை ஏற்க விருப்பமா, முன்பு தேர்தலில் போட்டியிட்டதுண்டா என நான்கு கேள்விகள் கேட்கப்படும். இவற்றுக்கு Yes or No என பதில் அளிக்கலாம். சர்வ முடிந்ததும் இயக்கத்தின் தலைவர் அண்ணாமலையின் வரவேற்பு காணொளி திரையில் தோன்றி இணைப்பு உறுதிப்படுத்தப்படும்.

அதன் பின் முகப்பு பக்கம் திறக்கும். இதில் இயக்கத்தின் நோக்கம் தலைவர்கள் எண்ணிக்கை நிகழ்வுகளின் காணொளி மற்றும் புகைப்படங்கள் போன்ற தகவல்கள் இருக்கும். இந்த செயலியில் மூன்று முக்கிய பகுதிகள் உள்ளன.

Even இந்த பகுதியில் நமது தலைவர்கள் அவர்கள் பகுதிகளில் நடத்தவருக்கும் நிகழ்ச்சிகளின் விவரங்கள் பதியப்பட்டு இருக்கும். உங்கள் பகுதியில் நிகழ்ச்சி நடத்த விரும்பினால் மேலே உள்ள பிளஸ் நிகழ்ச்சிக்கு, மேலே இருக்கும் கிரியேட் பட்டனை இதன் மூலம் உங்கள் நிகழ்ச்சிக்கான பதிவுகள் இயக்கத்தின் தலைவர் அண்ணாமலை அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்படும்.

அடுத்து உள்ள ரூல்ஸ் பகுதியில் இயக்கத்தின் தலைவர் அண்ணாமலை முன்னெடுத்த நிகழ்வுகளின் காணொளி அல்லது புகைப்படங்கள் பதிவிடப்பட்டிருக்கும் . உங்களின் முன்னெடுப்பை பதிவிட மேலே உள்ள பிளஸ் பட்டனை அழுத்தி அடுத்து வரும் பக்கத்தில் காணொளி அல்லது புகைப்படத்தை தேர்ந்தெடுக்கவும்.

பின் மேலே வலது பக்கம் உள்ள நெக்ஸ்ட் பட்டனை கிளிக் செய்து ,அடுத்து வரும் பக்கத்தில் நிகழ்ச்சி குறித்த தகவல் மற்றும் மாவட்டத்தை தேர்ந்தெடுத்து மேலே வலது பக்கம் உள்ள ஷேர் பட்டனை அழுத்தவும்.

இப்போது உங்கள் பதிவானது அப்ரூவலுக்காக அனுப்பப்பட்டிருக்கும் அங்கீகரிக்கப்பட்டபின் அதுநமதுரீலீஸ்பக்கத்தில் பகிரப்படும். அடுத்துள்ள ப்ரொபைல் பகுதியில் தங்களின் தனிநபர் அடையாள அட்டை சுய விவரங்கள் இருக்கும் இவற்றை சரிபார்க்கவும். இப்படியாக இன்னும் லட்சக்கணக்கானோர் அண்ணாமலை இயக்கத்தில் இணைந்து வருகிறார்கள்.

# விணாகிய ஆக்கிரமிப்பு அகற்றம்... சைதை ஜீனஸ் சாலை பெரிய பிரியாணி ஓட்டலின் வாகன பார்க்கிங்காக மாறிய அவலம்

## ஆங்காங்கே சிறிது சிறிதாக முளைத்த குட்டிக் கடைகள்







சென்னை மாநகராட்சியின் 13வது மண்டலத்திற்கு உட்பட்ட 142வது வார்டில் சைதாப்பேட்டை ஜீனஸ் சாலை உள்ளது. இங்கு மிகப்பெரிய பிரியாணி கடை (எஸ். எஸ்.) உள்ளது. இதன் அருகிலேயே அரசு பொது மருத்துவமனை, மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனை, மீன் மார்க்கெட், அரசு கட்டிடங்கள், ரயில் நிறுத்தம் ஆகியவை இயங்கி வருகின்றன.

இந்த ஜீனஸ் சாலையில் பல கடைகள் அகற்றப்படாமல் இருந்தது. இதனால் அதிக அளவில் போக்குவரத்து நெரிசல் இருந்து வந்தது. தொடர்ந்து புகார்கள் சென்ற வண்ணம் இருந்தன. இதற்கிடையில் தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில் மீண்டும் ஆக்கிரமிப்பு கடைகளை அகற்றக் கோரி புகார்கள் சென்றன. இதனையடுத்து நீதிமன்ற உத்தரவின் பேரில் ஜூலை மாதம் 28ம் தேதி அன்று ஜீனஸ் சாலையில் ஆக்கி ரமிப்புகள் அகற்றப்பட்டன. இந்த சாலையை பயன்படுத்தி வந்த மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால் இந்த மகிழ்ச்சி வெகு நாட்கள் நீடிக்கவில்லை. இரு நாட்களிலேயே கனவாக கலைந்தது. ஜீனஸ் சாலையையை ஆட்கொள்ளும் மிகப்பெரிய பிரியாணி கடையால்தான்

இந்த நிலை. ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட பிறகு இந்த பிரியாணி கடைக்கு வாகன நிறுத்தும் இடமாக மாறிவிட்டது. இது புதுவித ஆக்கிரமிப்பாகத்தான் கருத வேண்டும். கடை முன்பு மட்டும் இன்றி கடைக்கு எதிர்புறமும் ஏராளமான வாகனங்கள் ஆக்கிரமித்து நிறுத்தப்பட்டு வருகின்றன. கடைக்கு வரும் வாகனங்களின் பார்க்கிங்காகவே இது பயன் படுத்தப்படத் தொடங்கிவிட்டன. இதன் எதிரிலேதோன் மகப்பேறு மருத்துவ மனை உள்ளது. வாகனங்கள்எதிரே நிறுத்தப் படுவ தால் ஆம்புலன்ஸ் உள்ளே வருவதற்கு மிக வும் தடையாக உள்ளது. ஆரம்பத்திலேயே இதனை அரசு அதிகாரிகள் கவனித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என் றால் பழைய குருடி கதவைத் திறடி என்பது போல் மீண்டும் ஆக்கிரமிப்பின் பிடியில் ஜீனிஸ் சாலை சிக்கும் என்பதில் எந்தவித மாற்றமும் இல்லை என்றே அப்பகுதி மக்களும், சமூக ஆர்வலர்களும் கூறுகின்றனர்.

# சார்பதிவாளர் அலுவலருக்கு பணம் வாங்கி கொடுக்கும் சிவா (எ) சிவகுமார் யார் இவர்?

சென்னை தியாகராயாக நகரில் சார்பதிவாளர் அலுவலகம் உள்ளது. இங்கு புரோக்கர்கள் நடமாட்டம் அதிகரித்து வருவதால் பத்திரப்பதிவு செய்வதில் பிரச்சனை ஏற்படுவதாக பொதுமக்கள் குற்றச்சாட்டுகளை முன் வைத்த வண்ணம் உள்ளனர்.

பத்திரப்பதிவு அலுவலகங்களில் புரோக் கர்கள் நுழைவதற்குத்தடை விதிக்கப்பட்டு தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனால் பிரிக்க முடியாதது எதுவோ என்ற கேள்விகளுக்குபத்திரப்பதிவுஅலுவலகமும் புரோக்கர்களும் எனப்பதில் சொல்லலாம். புரோக்கர்கள் இல்லாமல் பத்திரப்பதிவு அலுவலகங்கள் இயங்குவதில்லை.

தற்போது தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் சார்பதிவாளர் அலுவல கங்களுக்கு சொத்துகளை விற்பனை செய் வோர் சொத்துகளை வாங்குபவர் ஆகிய இரண்டு தரப்பு ஆட்கள் மட்டுமே வர வேண்டும். இதனை தவிர புரோக்கர்கள், சார்பதிவாளர் அலுவலகங்களுக்குள் நுழை வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது,

இந்நிலையில் சென்னை சைதாப் பேட்டை பகுதியில் அமைந்துள்ள தியாகராய நகர் சார்பதிவாளர் அலுவலகத் தில் புரோக்கர்களின் ஆதிக்கம் காட்டுவ தால் பத்திரப்பதிவு மற்றும் பல்வேறு சான்றுகள் வழங்க கணிசமான தொகை செலுத்த வேண்டியுள்ளது என பொது மக்கள் புலம்புகின்றனர்.

தியாகராஜ நகர் சார்பதிவாளர் அலுவலகத்தில் தினமும் நூற்றுக்கணக்கா னவர்கள் தங்களுக்கு தேவையான பத்திரப்பதிவு, தானம். பாகப்பிரிவினை, உயில், பொது அதிகார பத்திரம், அக்குவிடுதலை, குத்தகை, அடமானம் போன்றவற்றை பதிவு செய்வதற்கும் வருகின்றனர்.

குறிப்பாக புரோக்கர் மூலம் சென்றால் தான் வேலைகள் விரைவாக முடிகிறது. பொது மக்கள் புரோக்கர்களை தாண்டி நேரடியாக சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு கொடுத்தால் இன்று போய் நாளை வா என ஊழியர்கள் மனுதாரர்களை அலைக் கழிக்க வைக்கின்றனர். அதே





போல் நிலம் பதிவு செய்ய வருபவர்கள் முறையாக பதில் கூறுவதில்லை. புரோக்கர்கள் மூலம் கணிசமான தொகை கொடுத்தால் மேற்கண்ட சான்றிதழ்கள் ஒரு மணி நேரத்திலேயே கிடைக்கிறது. எனவே பொது மக்களின் நலன் கருதி தியாகராய நகர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடமாடும் புரோக்கர்களை அடையாளம் கண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது.

இது குறித்து பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு வருபவர்களை கேட்டபோது, சென்னை நந்தனம் பகுதியில் அமைந்துள்ள தியாகராய நகர் சார் பதிவாளர் அலுவலகத்தில் புரோக்கர்களின் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதைபோல் அரசு அதிகாரிகள் போல் புரோக்கர்கள் சார்பதிவளார் அலுவலகத்தில் உள்ளதால் யார் அரசு அதிகாரி? யார் புரோக்கர்? என்பதை கண்டுபிடிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

புரோக்கர்கள் நடமாட்டத்துக்கு அரசு அதிகாரிகள் துணை கொண்டு போவ தால் அரசு அதிகாரிகள் அமரும் இடத்தில் புரோக்கர்கள் உள்ளனர். ஏற்கனவே தமிழக அரசு சார்பதிவாளர் அலுவலகத்தில் புரோக்கர்கள் நடமாடும் இருக்கக் கூடாது என விதிவிலக்கு போட்டிருந்தும் புரோக்கர்கள் அட்டகாசம் அதிகரித்து வருகிறது எனவே தியாகராய நகர் சார் பதிவாளர் அலுவலகத்தில் புரோக்கர்கள் நடமாடத்தை உடனடியாக தடுக்கவேண்டும் எனவும்சார் பதிவாளர் அலுவலகத்தில் அரசு அதிகாரிகள் ஐடி கார்டை அனிய வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

# ஈசிஆர் ரூட்டில் புதுச்சேரி வழியாக சென்னை - கடலூர் புதிய ரயில் பாதை



கிழக்கு கடற்கரையை ஒட்டி செல்லும் வகையில் ரயில் பாதை திட்டத்திற்கு இழுபறி நீடித்து வந்த நிலையில், தற்போது மத்திய அரசு கிரீன் சிக்னல் கொடுத்துள்ளது. பல தரப்பினரின் கோரிக்கையை ஏற்று இந்த திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்திருப்பதாக அதிகாரப்பூர்வ தகவலை தெரிவித்துள்ளனர்.

179 கிலோமீட்டர் தூரம். வங்கக் கடலை ரசித்தவாறே சில்லென்ற காற்றுடன் பரவசமூட்டும் ரயில் பயணத்திற்குதமிழகமக்கள் தயாராகி கொள்ளலாம். சென்னையில் இருந்து மாமல்லபுரம், மரக்காணம், புதுச்சேரி வழியாக கடலூர் வரை புதிய ரயில் பாதை திட்டம் எந்தவித தடைகளும் செயல்படுத்தப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த திட்டம் பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டிருந்தது. அதற்கு முக்கிய காரணம் புதுச்சேரி அருகே வழித்தடத்தை திட்டமிடுவதில் சிக்கல்கள் நீடித்து வந்தன. இதனால் அடுத்தகட்டத்தை நோக்கி நகரவே இல்லை. ஆனால் பல்வேறு தரப்பினர் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

வங்கக்கடலை ஒட்டிய கடலோர பகுதிகளில் வளர்ச்சி திட்டங்கள் வர வேண்டும்என்றுவலியுறுத்தி வருகின்றனர். இதற்கு சென்னை ரூ கடலூர் புதிய ரயில் பாதை திட்டம் உத்வேகம் அளிக்கும் வகையில் இருக்கும். இவை அனைத்தையும் பரிசீலனை செய்த மத்திய ரயில்வே துறை அமைச்சகம், இந்த திட்டத்தை முழுமையாக செயல்படுத்த முடிவு செய்துள்ளது. முன்னதாக நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் காங்கிரஸ் எம்.பி ஆர்.சுதா மக்களவையில் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதாவது, மேற்கு கடற்கரையில் கொங்கன் ரயில்வே மண்டலம் செயல்படுவதுபோலகிழக்கு பகுதியில் கிழக்கு கடலோர ரயில்வே மண்டலத்தை தொடங்கும் திட்டங்கள் ஏதேனும் இருக்கின்றனவா? அப்படி இருந்தால் வடக்கில் புலிகேட்டில் இருந்து தெற்கில் கன்னியாகுமரி வரை செயல்படுத்துவதற்கு வாய்ப்புகள் உள்ளதா? போன்ற கேள்விகளை எழுப்பியிருந்தார். இதற்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்துள்ள மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ், சென்னை ரூ கடலூர் புதிய ரயில் பாதை திட்டத்தை கட்டாயம் செயல்படுத்துவோம் என்பதை தெளிவுபடுத்தியுள்ளனர்.

சென்னை ரூ கடலூர் ரயில் பாதை: கடலோர ரூட்டில் கிடைக்கும் நன்மைகள்

சென்னையில் இருந்து மாமல்லபுரத்திற்கு நேரடி ரயில் சேவை வசதி கிடைக்கும். இது உள்நாட்டு மற்றும்வெளிநாட்டுசுற்றுலா பயணிகளை ஈர்க்கும்.

புதுச்சேரியும் முக்கிய சுற்றுலா தலமாக திகழ்கிறது. எனவே சென்னை, மாமல்லபுரம், புதுச்சேரி என மூன்று முக்கியசுற்றுலாதலங்களை இணைப்பதற்கும், முக்கியத்துவம் வாய்ந்த பயண அனுபவத்தையும் தரவுள்ளது.

ஈசிஆர் சாலை பயணத்தில் நிறைய விபத்துகள் ஏற்படுகின்றன. இதனை தவிர்ப்பதற்கு புதிய ரயில் சேவை வழிவகுக்கும்.

கடல்வழி சரக்கு போக்குவரத்திற்கு சென்னை ரூ கடலூர் ரயில் பாதை உதவிகரமாக இருக்கும். சென்னையில் உள்ள துறைமுகம் மற்றும் கடலூரில் புதிதாக திட்டமிடப்பட்டுள்ள துறைமுகங்களுக்கு எளிதாக சரக்குகளை ஏற்றி செல்ல முடியும்.

மரக்காணம் மற்றும் அதனை ஒட்டியுள்ள கடலோர கிராமங்கள் அனைத்தும் நகரமயமாதலை நோக்கி வேகமாக நகர்ந்து வருகின்றன. எனவே புதிய குடியிருப்புகள், வர்த்தக கட்டுமானங்கள் வரக்கூடும். இதற்கான முதலீடுகளை ஈர்க்க புதிய ரயில் சேவை பயன் தரும்.


ஈசிஆர் வழித்தட மாவட்டங்களில் புதிய தொழில்களை கால் தடம் பதிக்கவும், ஏற்கனவே இருக்கும் தொழில்கள் விரிவாக்கம் செய்யவும் வாய்ப்பு ஏற்படும். இது வளர்ச்சியை பரவலாக்கி சென்னையைதவிர்த்துமற்ற கடலோர மாவட்டங்களில் மக்கள் குடியேறவும், வேலைவாய்ப்பை பெறவும் உதவும்.

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பலவும் வலுப்பெற்று, பொருளாதார ஏற்றத்திற்கு வித்திடும்.

கிழக்கு கடலோர பகுதிகளில் சாலை வசதி, ரயில் வசதி ஆகியவை கிடைக்கவுள்ளதால் ரியல் எஸ்டேட் மதிப்பு கூடும்.

# திருச்சி கிழக்கு இடைத்தேர்தலில் தவெக சார்பாக போட்டியா?

## என்ன சொல்கிறார் சகாயம்



தமிழக சட்டமன்ற தேர்தலில் தவெக தலைவரான விஜய் சென்னையில் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு என இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டார். இந்த இரண்டு இடத்திலும் அவர் வெற்றி பெற்ற நிலையில் பெரம்பூர் தொகுதியை தக்க வைத்து, திருச்சி கிழக்கில் ராஜினாமா செய்தார். இதனையடுத்து தவெக சார்பாக அங்கு யார் களமிறங்க போகிறார் என்ற எதிர்பார்ப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இங்கு தவெக சார்பாக நடிகரும், இயக்குனருமான ராகவா லாரன்ஸ் போட்டியிட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியானது. இதனையடுத்து விஜய் யின் அரசியல் ஆலோசகர் ஜான் ஆரோக்கியசாமி, சகாயம் ஐஏஎஸ் ஆகியோரின் பெயர்களும் திருச்சி கிழக்கு இடைத்தேர்தலில் தவெக போட்டியிட போவதாக அடிப்பட்டது. இதற்கிடையில் சகாயம் ஐஏஎஸ் போட்டித் தேர்வு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கும் கூட்டத்தில் பங்கேற்று பேசியுள்ளது கவனம் ஈர்த்து கொண்டிருக்கிறது.

இது தொடர்பாக அவர் பேசுகையில், சகாயம் திருச்சி கிழக்கு இடைத்தேர்தலில் போட்டியிட போகிறார் என்று பேசுகிறார்கள். நான் திருச்சி கிழக்கில் நிற்க போகிறேனா என்பதெல்லாம் பிரச்சனை கிடையாது. டிஎன்பிஎஸ்சி தேர்வில் தொகுதிக்கு ஒருவர் வெற்றி பெற வேண்டும். நீ தொகுதி ஒன்றில் வெற்றி பெற போகிறாயா என்பதுதான் பிரச்சனை என தெரிவித்துள்ளார். அதோடு நீ என்னுடைய வெற்றியை பற்றி எல்லாம் கவலைப்படுகிறாய்.

நான் எந்த தொகுதி என்பதை பற்றியெல்லாம் கவலைப்பட வேண்டாம் என்று பேசியுள்ளார். அவருடைய இந்த கருத்து தற்போது சோஷியல் மீடியாவில் தற்போது கவனம் ஈர்த்து கொண்டிருக்கிறது. முன்னதாகதவெகசார்பாகதிருச்சிகிழக்கில் சகாயம் ஐஏஎஸ் போட்டிட போகிறார். அவர் வெற்றி பெற்றார் அமைச்சரவையில் இடம் கொடுக்கவும் முதல்வர் விஜய் திட்டமிட்டு இருப்பதாகவும் தகவல்கள் பரவி பெரியளவில் இணையத்தில் வைரலாகி வந்தது.

இதனையடுத்து சமீபத்தில் மாற்றுக்கட்சியை சார்ந்தவர்கள் தவெகவில் இணைவதை விமர்சனம் செய்திருந்தார் ஐஏஎஸ் சகாயம். குறிப்பாக குட்கா முறைகேடு, சிபிஐ விசாரணை மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குகளை எதிர்க்கொண்டு வரும் முன்னாள் அமைச்சர்கள் சி. விஜயபாஸ்கர் மற்றும் எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோரை தவெகவில் இணைப்பதால், முதல்வர் விஜய் மக்களிடையில் கட்டியெழுப்பிய நம்பிக்கையை சீர்குலைத்து விடும் என கவலை தெரிவித்திருந்தார்.

இந்நிலையில்தற்போதுதிருச்சிகிழக்கில் நான் போட்டியிடுகிறேனா என்பதெல்லாம் பிரச்சனை கிடையாது என ஐஏஎஸ் சகாயம் கூறியுள்ளார். இதற்கிடையில் திருச்சி கிழக்கில் ராகவா லாரன்ஸ் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் தான் போட்டியிட போவது இல்லை என்பதை உறுதிப்படுத்தினார். இதனை தொடர்ந்து தனிக்கட்சி துவங்கும் முடிவில் ராகவா லாரன்ஸ் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி வருவது குறிப்பிடத்தக்கது.

# 8வது ஊதியக்குழு அறிக்கையை முதல்வர் வெளியிட வேண்டும்

## அரசு அலுவலர் ஒன்றிய மாநில தலைவர் கோரிக்கை



தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில தலைவரும், அனைத்து துறை சங்கங்களின் கூட்டமைப்பு முதன்மை ஒருங்கிணைப் பாளருமான மகேந்திர குமார் முதலமைச்சருக்கு விடுத்துள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்ப தாவது:

தமிழ்நாட்டை ஆளுகின்ற தமிழக வெற்றிக்கழக அரசின் கொள்கை கோட்பாடுகள் மற்றும் தேர்தல் வாக்குறுதி களின்படி 1.4.2003 பணியில் சேர்ந்து 31.12. 2025 வரை பணியாற்றி ஓய்வு பெற்ற 60,000 மேற்பட்ட ஓய்வூதி யதாரர்கள், தொடர்ந்து பங்களிப்பு ஓய்வூதிய திட் டத்தில் பணியாற்றி வரும் பணியாளர்கள் மிகப் பெரும் எதிர்பார்ப்போடு உள்ள அரசு அலுவ லர்கள். ஆசிரியர்கள் அனைவருக்கும் பழைய ஓய்வூதிய திட்டத்தை அறி விக்க வேண்டும்.

சிறப்பு கால முறை ஊதியம் மற்றும் தொகுப்பூதி யத்தில் பணிபுரியும் அங் கன்வாடி, சத்துணவு, ஊர் புற நூலகர்கள், டேங்க் ஆபரேட்டர்கள், கிராம உதவியாளர்கள், டாஸ் மார்க் பணியாளர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை ஆகியவற்றில் பணியாற் றும் என்.எச்.எம். பணியா ளர்கள் தாய்-சேய் திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்கள், பல்வேறு துறைகளில் பணியாற்றும் ஏவலர்கள், காவலர்கள், தூய்மை காவலர்கள் உள் ளிட்ட அனைத்து நிலை பணியாளர்களுக்கும் கால முறை ஊதியமும், 10 ஆண்டுகள் தினக்கூலியாக பணியாற்றும் பணியாளர்களுக்கு நிரந்தர பணிடமும், புற ஆதார முறையில், ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்களை தொகுப்பூதிய மற்றும் சிறப்பு காலமுறை ஊதிய பணியாளர்களாகவும் அறிவித்திட வேண்டும்,

மத்திய அரசு 01.01.2026 முதல் 8 வது ஊதிய குழு செயல்படும் என அறிவித்து அதற்கான அனைத்து வேலைகளையும் முடித்துள்ள நிலையில், மாநில அரசு 8 வது ஊதிய குழு தொடர்பான எந்த அறிவிப்புகளும் வெளியிடாத நிலையில், எட்டாவது ஊதிய குழுதொடர்பானஅறிக்கைகளை வெளியிட வேண்டும், இந்த பிரதான கோரிக்கைகளை வருகின்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலோ அல்லது சுதந்திர தின உரையிலோ முழுமையாக வெளியிடப்படும் என்ற எதிர்பார்ப்போடு தமிழ்நாட்டில் பணி புரியும் 12 லட்சம் அரசு அலுவலர்கள் ஆசிரி யர்கள் அனைத்து நிலை பணியாளர்களும் எதிர்நோக்கி உள்ளனர். இதை முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றுக் கொடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது




# உலக சமயங்களை ஒன்றிணைக்கும் தமிழர் ஆன்மவியல் அறக்கட்டளை நிறுவனர் தெய்வநாயகம் 93வது பிறந்தநாள் விழா

ஆன்மீக ஞானகுருமுனைவர்பேராசிரியர் உலக சமயங்களை ஒருங்கிணைக்கும் தமிழர் ஆன்மவியல் அறக்கட்டளையின் நிறுவனர் அய்யா தெய்வநாயகம் அவர்களின் 93 வது பிறந்தநாள் விழா செயின்ட் ஜார்ஜ் பள்ளியில் அமைந்துள்ள கலையரங்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் போதகர். தனசேகரன் இறவேண்டுதலுடன் இனிதே துவங்கியது.

முனைவர் தெய்வநாயகம் அவர்கள் வரவேற்புரை மற்றும் முகப்புரை வழங்க மேனாள் பேராயர். சின்னப்பா அவர்கள் சிறப்புரை வழங்க. கவிதா பார்த்தசாரதி தமிழ் பாடல் பாட ஐயாவின் கொள்ளுப் பேரப்பிள்ளைகள் தமிழ்த்தாய் குறித்துப் பேச. பேராசிரியர் சாம்சன் ஓய்வு பெற்ற காவல் துறை ஆய்வாளர் ஜேம்ஸ் பேராசிரியர் இறைமொழியன் லூர்துசாமி ஆகியோர் ஐயாவின் ஆய்வுகளைக் குறித்து சாட்சி பகிர பேழை செய்ய உதவியாய் இருந்த வில்லியம்ஸ் மரியாதை செலுத்த. ஜான் ஸ்டீபன் முதற்பேழையைப் பெற்றுக் கொள்ள, போதகர் பொன்நேசன். ராஜசேகரன், பாஸ்கர், பாண்டித்துரை ஆகியோர் வாழ்த்துரை வழங்க, பாலின் நன்றி உரைக்குப் பின்பு போதகர். சம்பத் அவர்கள் நிறைவு இறைவேண்டல் செய்ய பிறந்தநாள் விழா மகிழ்வுடன் நிறைவு பெற்றது. இந்த நிகழ்வில் தகவல் எக்ஸ்பிரஸ் ஆசிரியரும், வெளியீட்டாளரும், ஐயாவின் மாணவருமாகிய ஆ.இருதயராஜ் பொன்னாடை போர்த்தி வாழ்த்து பெற்றார். இதில் முன்னாள் பேராயர் ஏ.எம்.சின்னப்பா உள்பட ஆராய்ச்சி மாணவர்கள், பேராசிரியர்கள், அரசியல் தலைவர்கள் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# மக்கள் சேவையை புறக்கணிக்க காவல்துறையுடன் போட்டிபோடும் சென்னை மாநகராட்சி அதிகாரிகள்!



சென்னையின் முக்கிய பகுதிகளில் ஒன்றாக சைதாப்பேட்டை திகழ்கிறது. இது மிகவும் மக்கள் நெருக்கடி உள்ள பகுதியாகும். இங்குள்ள ஜீனஸ் சாலை மிகவும் புகழ் பெற்றது. ஏனென்றால் இங்குதான் அரசு பொது மருத்துவமனை, மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனை, மீன் மார்க்கெட், அரசு கட்டிடங்கள், ரயில் நிறுத்தம் ஆகியவை இயங்கி வருகின்றன.

சின்ன சாலையான ஜீனஸ் சாலையில் பல ஆண்டுகளாக கடைகள் ஆக்கிர மித்திருந்தன. எத்தனையோ ஆண்டுகள் போராடியும் இந்த ஆக்கிரமிப்பு சாலையோர கடைகளை அகற்ற முடியவில்லை. இதனால் அதிக அளவில் போக்குவரத்து நெரிசல் இருந்து வந்தது. இதனால் ஜீனஸ் சாலையை கடப்பதற்குள் மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர். அவசரத்தற்கு ஆம்புலன்ஸ் சென்றால்கூட அதற்குவழிகிடைப்பதில் சிரமம் ஏற்பட்டு வந்தது.

தொடர்ந்து புகார்கள் சென்ற வண்ணம் இருந்தன. இதற்கிடையில் தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில் மீண்டும் ஆக்கிரமிப்பு கடைகளை அகற்றக் கோரி புகார்கள் சென்றன. இதனையடுத்து நீதிமன்ற உத்தரவின் பேரில் ஜுலை மாதம் 28ம் தேதி அன்று ஜீனஸ் சாலையில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன.

நீதிமன்ற உத்தரவையடுத்து மாநக ராட்சி அதிகாரிகளை காவல் துறையினர் தொடர்பு கொண்டு ஆக்கிரமிப்புகளை அகற்றக் கூறினர். ஆனால் அதிகாரிகள் ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. வெளியே இருப்பதாக தட்டிக் கழித்தனர். இதனால் காவல்துறையினர் அப்போதைக்கு ஆக்கிரமிப்புகளை அகற்றும்படி எச்சரிக்கைவிடுத்துவிட்டு சென்றனர்.

காவல்துறையினர் சென்ற பிறகு மாநகராட்சி அதிகாரிகள் திடீரென ஜீனஸ் சாலைக்கு வருகை தந்து ஆக்கிர மிப்புகளை அகற்றினர். இந்தப் போக்கு சைதாப்பேட்டையில் காவல்துறை, மாநக ராட்சி அதிகாரி களிடையே ஒற்றுமை யின்மையையே காட்டுகிறது. எப்படியும் இரு துறைகளுமே மக்கள் பணிதான் செய்கிறது. அப்படி இருக்கும்போது இந்த தேவையற்ற ஈகோ எதற்கு என்று சைதாப்பேட்டை சமூக ஆர்வலர்கள் கருதுகின்றனர்.

# காவிரியில் நீர் விவகாரம்: தமிழ்நாடு அரசு உடனே அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்டவேண்டும்

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அறிக்கை!

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிறுவனர் தலைவர் தொல். திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில், காவிரி நீர் ஒழுங்காற்றுக்குழு ஆணையிட்ட பிறகும் கூட காவிரியில் நீர் திறந்துவிடாத கர்நாடக அரசின் தமிழர் விரோதப் போக்கு அதிர்ச்சியளிக்கிறது. ஒழுங்காற்றுக் குழுவையும் அவமதிக்கும் வகையில் நடந்து கொள்ளும் கர்நாடக அரசின் இப்போக்கைவிடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் சார்பில் கண்டிக்கிறோம்.

கர்நாடக அரசின் இத்தகைய பிடிவாதப் போக்கினால் தமிழ்நாட்டின் டெல்டா பகுதி முழுவதும் விவசாயம் பாதிக்கப்பட்டுப் பாலைவனமாக மாறிவிடும் ஆபத்தான சூழல் ஏற்பட்டுள்ளது.

“தமிழ்நாட்டுக்கு கர்நாடகா திறந்து விட்டுள்ள நீர் இதுவரை ஒட்டுமொத்தமாக ஒரு டி.எம்.சி. அடி (மீனீநீயீமீ) அளவைக்கூட எட்டவில்லை” என்று காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுவின் (சிகீஸிசி) தலைவர் வினீத் குப்தா கூறியுள்ளார்.



“2018இல் வழங்கப்பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி பிலிகுண்டுலுவில் கிடைக்கப்பெற வேண்டிய அளவு 27.2 டி.எம்.சி. அடியாக இருந்த நிலையில், ஜூலை 27 வரையிலான நிலவரப்படி அங்கு 0.6 டி.எம்.சி. அடி மட்டுமே வந்து சேர்ந்திருக்கிறது. ஜூன் முதல் நாள் முதல் நீர் வரத்தில் ஏற்பட்ட ஒட்டுமொத்தப் பற்றாக்குறை சுமார் 33 டி.எம்.சி. அடியாகும். நிர்ணயிக்கப்பட்ட அளவான 36.4 டி.எம்.சி. அடியுடன் ஒப்பிடுகையில், ஜூன் 01 முதல் ஜூலை 27 வரை பிலிகுண்டுலுவில் பெறப்பட்ட நீரின் அளவு சுமார் 3.6 டி.எம்.சி. அடி மட்டுமே. அதாவது 10% மட்டுமே” என அவர் தெரிவித்துள்ளார்.

இப்போது காவிரி மேலாண்மை வாரியம் அடுத்துவரும் 15 நாட்களுக்கு 3500 கியூசெக் நீரைத் திறந்து விடுமாறு கர்நாடகாவுக்கு ஆணையிட்டுள்ளது. ஆனால், அதையும் கொடுக்கக்கூடாது என கர்நாடக மாநில விவசாயிகள் போராடுகின்றனர்.

குறுவை சாகுபடி இல்லாமல் போய்விட்டது. சம்பா சாகுபடியும் செய்ய முடியாத நிலையில் தமிழ்நாட்டின் டெல்டா மாவட்டங்களில் ஒட்டுமொத்த விவசாயமும் கேள்விக் குறியாகி உள்ளது.

இனியும் கர்நாடகா அரசு நமக்கு நியாயம் செய்யும் என நம்புவதற்கு இடமில்லை. எனவே, தமிழ்நாட்டின் சார்பில் நாம் நமது நியாயமான குரலை உரத்து வெளிப்படுத்த வேண்டும்.

இந்நிலையில் தமிழ்நாடு அரசு உடனே அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்டவேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## 24 மணி நேரமும் எரியும் தெருவிளக்கு



திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம் குட்டம் ஊராட்சி முழுக்க அனைத்து ஊர்களிலும் உள்ள தெரு விளக்கில் சுவிட்ச் வைக்கவில்லை. இதனால் 24 மணி நேரமும் தெருவிளக்கு எரிகின்றது. நல்லபொம்மன்பட்டி தேவிநாயக்கன்பட்டிசுக்காம் பட்டி குட்டம் தாசிரிபட்டி ஆகிய ஊர்களில் கரண்ட் பில் அதிகமாகும் சூழ்நிலை உள்ளது. இதை கிளர்க் தங்கவேலுவிடம் ரெக்கவரி பண்ண வேண்டும். இவர் பொதுமக்களிடம் திமிராக பேசி வருகின்றார்.

இவர் தொடர்ந்து 15 வருடமாக இந்த பஞ்சாயத்தில் இருந்து வருகிறார். அனைத்து தெருவிளக்கு பாக்ஸிலும் சுவிச் வைக்க உத்தரவிட்டு ஈபி பில் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறும், இவர் மீது துரைரீதியான உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம் என்று கலெக்டருக்கு கோரிக்கை மனு அனுப்பப்பட்டுள்ளது.

## மருத்துவமனையில் குளுக்கோஸ்க்கு பதிலாக ஏற்றப்பட்ட மினரல் வாட்டர் ட்ரிப்ஸ்



மத்தியப் பிரதேசத்தின் டிண்டோரி மாவட்ட அரசு மருத்துவமனையில், சத்யம் யாதவ் என்ற 18 வயது இளைஞர் வாந்தி மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக அனுமதிக்கப்பட்டார்.

அப்போது அவருக்கு முறையான குளுக்கோஸ் அல்லது உப்புநீர் (Saline) பாட்டிலுக்குப் பதிலாக, சாதாரண மினரல் வாட்டர் பாட்டிலில் (Blue பிராண்ட்) துளையிட்டு ஐவி ட்ரிப்ஸ் ஏற்றப்பட்டது.

மருத்துவமனையில் நோயாளி படுத்திருக்க, அவருக்கு அருகில் மினரல் வாட்டர் பாட்டில் தொங்க விடப்பட்டிருக்கும் இந்த அதிர்ச்சியூட்டும் காட்சி வீடியோவாக எடுக்கப்பட்டு சமூக ஊடகங்களில் பரவியது. இந்த வீடியோ சமூக ஊடகங் களில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியதை அடுத்து, சம்பந்தப்பட்ட உள்ளூர் மருத்துவ அதிகாரி மற்றும் மாவட்ட நிர்வாகம் இது குறித்து தீவிர விசாரணைக்கு உத்தரவிட்டு, தவறிழைத்த பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளனர். இந்தச் சம்பவம் தற்போதைய மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி. நட்டா மற்றும் மத்தியப் பிரதேச சுகாதாரக் கட்டமைப்பு மீது கடுமையான விமர்சனங்களை சமூக வலைத்தளங்களில் எழுப்பியுள்ளது.

## நர்சிங் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த தனியார் கல்லூரி தாளாளர் கைது

தென்காசி அருகே நர்சிங் கல்லூரி மாணவிக்குத் தொடர் பாலியல் தொல்லை அளித்த வழக்கில், தலைமறைவாக இருந்த தனியார் மருத்துவக் கல்லூரித் தாளாளரை காவல்துறையினர் கைது செய்தனர்.

தென்காசி பகுதியிலுள்ள தனியார் நர்சிங் கல்லூரியில் பயிலும் மாணவி ஒருவருக்குக் கல்லூரியின் தாளாளர் தொடர்ந்து பாலியல் தொல்லை கொடுத்து வந்ததாகக் கூறப்படுகிறது. பாதிக்கப்பட்ட மாணவி இது குறித்து முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு புகார் மனு ஒன்றை அனுப்பினார். இப்புகாரின் பேரில் விசாரணை மேற்கொண்ட தென்காசி காவல்துறையினர், பெண் வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளிட்ட 7 சட்டப் பிரிவுகளின் கீழ் கல்லூரித் தாளாளர் மீது வழக்குப் பதிவு செய்தனர்.



வழக்குப் பதிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து தலைமறைவாக இருந்த கல்லூரித் தாளாளரைக் காவல்துறையினர் தீவிரமாகத் தேடி வந்தனர். இந்நிலையில், தலைமறைவாக இருந்த அவரைத் தென்காசி காவல்துறையினர் அதிரடியாகக் கைது செய்தனர். கைது நடவடிக்கைக்குப் பிறகு, தனக்கு நெஞ்சு வலி ஏற்பட்டதாக அவர் கூறியதையடுத்து, அவரை உடனடியாகக் காவல்துறையினர் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அனுமதித்தனர். இச்சம்பவம் குறித்து காவல்துறையினர் மேலும் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கொளத்தூர் ஈவிஎம் மீது சந்தேகம்... ஸ்டாலின் மனு... களத்தில் இறங்கிய தேர்தல் ஆணையம்




கொளத்தூர் தொகுதியில் வாக்குப்பதிவு இயந்திரம் மீது திமுக தலைவர் ஸ்டாலின் சந்தேகம் எழுப்பியிருந்த நிலையில், வாக்குப்பதிவு இயந்திரம் சரிபார்க்கும் பணி தொடங்கியுள்ளது.

தமிழக சட்டமன்ற தேர்தலில் எதிர்பாரா திருப்பமாக கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக திமுக அதிமுக என இரு கட்சிகள் மட்டுமே மாறி மாறி ஆட்சி அமைத்து வந்த நிலையில், புதிய அரசியல் மாற்ற மாக நடிகர் விஜய் தலைமையிலான தவெக தனிப்பெரும் கட்சியாக தவெக உரு வெடுத்தது. ஆளுங்கட்சியாக இருந்த திமுக தேர்தலில் தோல்வியை சந்தித்தது. அதிலும் முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தனது கொளத்தூர் தொகுதியில் தோல்வி அடைந்தது தமிழக மக்களை மட்டுமல்ல இந்திய அரசியலையே திரும்பி பார்க்கவைத்தது.

அந்த வகையில் மு.க.ஸ்டாலின் தன்னை எதிர்த்து போட்டியிட்ட தவெக வேட்பாளர் வி.எஸ் பாபுவிடம் 8,795 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்திருந்தார். இதன் காரணமாக திமுகவினர் கடும் அதிர்ச்சி அடைந்த நிலையில், கொளத்தூர் தொகுதியில் இவிஎம் இயந்திரம் மீது ஸ்டாலின் சந்தேகத்தை எழுப்பியிருந்தார்.

அந்த வகையில் கொளத்தூர் தொகுதியில் உள்ள 14 வாக்குச்சாவடிகளின் உள்ள வாக்கு இயந்திரத்தில் திமுகவிற்கு குறைவான வாக்குகளே பதிவாகியிருந்தது. எனவே அந்த குறிப்பிட்ட வாக்குச்சாவடியில் உள்ள வாக்குப்பதிவு இயந்திரங்களை சோதிக்கவேண்டும் தேர்தல் ஆணையத்தில் கொளத்தூர் தொகுதி வேட்பாளரும், திமுக தலைவருமான ஸ்டாலின் கோரிக்கை மனு கொடுத்திருந்தார். இதனையடுத்து கொளத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) மற்றும் வி.வி.பாட் (VVPAT) கருவி களின் தொழில்நுட்பச் சோதனை மற்றும் சரிபார்ப்பு பணி தொடங்கியுள்ளது.

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் உள்ளபாதுகாப்பு அறையில் இந்தசோதனை நடைபெற்று வருகிறது. கொளத்தூர் தொகுதியில் உள்ள 14 வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்பட்ட 42 பாலேட் யூனிட்டுகள் (Ballot Units), 14 கன்ட்ரோல் யூனிட்டுகள் (Control Units) மற்றும் 14 வி.வி.பேட் (கூஷிகூஷிறிகிஜி) கருவிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இதனையடுத்து கொளத்தூர் தொகுதியில் உள்ள 14 வாக்குச்சாவடியில் இயந்திரங்கள் சரிவர இயங்குகிறதா.? என ஆய்வு பணியை தேர்தல் ஆணைய அதிகாரிகள் தொடங்கியுள்ளனர்.

ஒருவாரம் தினந்தோறும் வாக்குப்பதிவு இயந்திரம் சரிபார்க்கும் பணியானது நடைபெறவுள்ளது. ஒரு நாளைக்கு 2 வாக்குச்சாவடி என 7 நாட்களுக்கு 14 வாக்குச்சாவடியில் பதிவான வாக்குகள் மற்றும் இயந்திரத்தின் நிலை தொடர்பாக ஆய்வு செய்யப்படவுள்ளது.

இந்தச் சோதனையில் கலந்து கொள்ள கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களுக்கும் தேர்தல் துறை அழைப்பு விடுத்துள்ளது. இதுகுறித்து அரசு அதிகாரிகள் கூறுகையில், "இது வாக்குகளை மறுஎண்ணிக்கை செய்வதற்கான நடவடிக்கை அல்ல. இ.வி.எம். இயந்திரங்கள் சரியாக செயல்பட்டனவா என்பதை உறுதி செய்யும் தொழில்நுட்பச் சோதனை மட்டுமே" என்று தெரிவித்தனர்.

## மாங்கனீஸ் தாது உற்பத்தி நிறுவனத்தின் நிகர லாபம் 70 சதவீதம் உயர்வு

மாங்கனீஸ் தாது உற்பத்தி நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு 202627ம் நிதியாண்டில் முதல் காலாண்டிற்கான நிதி மற்றும் செயல்பாட்டு முடிவுகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிறுவனத்தின் உற்பத்தி, விற்பனை, நிகர லாபம் ஆகியவற்றில் சீரான வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

இந்த நிறுவனத்தின் செயல்பாடுகள் மூலம் ஈட்டப் பட்டுள்ள வருவாய் ரூ. 348.06 கோடியிலிருந்து ரூ. 370.88 கோடியாக அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7 சதவீம் அதிகமாகும். இந்த நிறுவனத்தின் மொத்த வருவாய் ரூ.370.52 கோடியிலிருந்து ரூ.391.13 கோடியாக அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6 சதவீதம் கூடுதலாகும்.

இந்த நிதியாண்டில் முதலாவது காலாண்டில் ஈட்டப்பட்டுள்ள நிகர லாபம் (வரிக்குப்பிந்தைய) 70 சதவீதமாக அதிகரித்துள்ளது. மேலும் இந்நிறுவனத்தின் நிகர விற்பனை வருவாய் முந்தைய ஆண்டின் இதேகால ஆண்டில் இருந்த ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ. 8,884 என்ற அளவில் இருந்து 10 சதவீதம் அதிகரித்து மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 9,749 ஆக அதிகரித்துள்ளது.

மாங்கனீசு தாது உற்பத்தி 5 லட்சத்து 7 ஆயிரத்து 605 மெட்ரிக் டன்னாக இது உள்ளது. இது கடந்த நிதியாண்டின் இதேகாலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 1 சதவீதம் கூடுதலாகும்.

## புனித தோமா புகழ் விழா-2026

இந்தியர் ஆன்மீக விடுதலை இயக்கம் தமிழ்நாடு மற்றும் ஒரே மந்தை ஒரே மேய்ப்பன் ஊழியர் ஐக்கியமும் இணைந்து நடத்தும் புனித தோமா புகழ் விழா 2026

இந்தியர் ஆன்மீக விடுதலை இயக்கம் தமிழ்நாடு மற்றும் ஒரே மந்தை ஒரே மேய்ப்பன் ஊழியர் ஐக்கியமும் இணைந்து நடத்தும் புனித தோமா புகழ் விழா 2026

**“தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்.” யோவான் 20:28**

நமது ஆண்டவரும் உலக இரட்சகருமான இறைவன் இயேசுவின் அன்பை இந்திய மண்ணிற்கு சுமந்து வந்து இரத்த சாட்சியாக மறித்த 1976 ஆம் ஆண்டை நினைவு கூர்ந்து இந்திய திருச்சபை பிறந்த நாளாக உலக திருச்சபை கொண்டாடும் வேளையில் உலகிற்கு “இயேசுவே கடவுள்” என அறிவித்த பழமையான சரித்திர புகழ் பெற்ற முதல் இந்திய மிஷனரி புனித தோமா என்பதை இந்திய திருச்சபை இன்னும் அறியாமல் இருப்பதை உணர்த்தும் வண்ணம் ஒரே மந்தை ஒரே மேய்ப்பன் ஊழியர் ஐக்கியம் செயல்படுகிறது. மேலும், தமிழ் நாட்டின் பல மாவட்டங்களில் செயல்படும் நமது நற்செய்தியாளர்களை ஊக்குவிக்க “புனித தோமா புகழ் தரிசன விதை” குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு மாதத்திற்கு ஒரு விதை என நிர்ணயித்து மாதம் ஒரு மாவட்டத்திற்கு அளித்திட இருக்கிறோம்.

ஆகவே, நமது அனைத்து மாவட்ட தலைவர் திருத்தொண்டர் அனைவரும் தவறாமல் பங்கு பெற அன்புடன் அழைக்கிறோம். இவன் பேராசிரியர் இறைமொழியன்.

குறிப்பு: விதை புத்தகமாகவும் ரொக்கமாகவும் அமையும். நாள் 3.7.26 வெள்ளிக் கிழமை காலை 9:30 மணி. இடம்: சமூக நல்லிணக்க வள்ளுவர் கூடம் மினி ஹால், மதனந்தபுரம், போரூர் சென்னை-125.

# மாயமாகும் வாகனங்களை கண்டுபிடிக்க ரூ.5,099 கட்டணத்தில் கண்காணிப்பு கருவி



பொதுப் போக்குவரத்து மற்றும் இதர பொருந்தக்கூடிய வாகனங்களில் பொருத்தப்படும் வாகன இருப்பிடக் கண்காணிப்பு சாதனம் (Vehicle Location Tracking Device-VLTD) கட்டண நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கோடிக்கணக்கான வாகனங்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. அந்த வகையில், பல இடங்களில் வாகனங்கள் திருடப்படும் சம்பவமும் நடைபெற்று வருகிறது. ஆனால் வாகனங்கள் எங்கே உள்ளது.? எந்த இடத்தில் உள்ளது என கண்டுபிடிக்க முடியாத நிலையானது ஏற்படுகிறது. இந்த நிலையில் வாகனங்களில் வாகன இருப்பிடக் கண்காணிப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும் என தமிழக அரசு சார்பாக அறிவுறுத்தப்பட்டது. ஆனால் இந்த கருவியின் விலை பல ஆயிரங்களில் இருந்ததால் வாகன உரிமையாளர்கள் புகார் தெரிவித்தனர். இதனையடுத்து தமிழக அரசு கூஷிலிஜிஞ் உற்பத்தியாளர்களுடன் ஆலோசனையானது நடத்தப்பட்டது. இதில் அதிக விலைக்கு VLTD விற்பனை செய்யக்கூடாது எனவும், தமிழக அரசு நிர்ணயித்துள்ள விலையிலேயே அந்த கருவியானது விற்பனை செய்ய வேண்டும் என அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக போக்குவரத்து மற்றும் சாலைப்பாதுகாப்பு ஆணையர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் பொதுப்போக்குவரத்து மற்றும் இதர பொருந்தக்கூடிய வாகனங்களில் பொருத்தப்படும் வாகன இருப்பிடக் கண்காணிப்பு சாதனம் (Vehicle Location Tracking Device VLTD) தொடர்பாக, பல்வேறு இடங்களில் நிர்ணயிக்கப்பட்டதை விட அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதாக, வாகன உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில், போக்குவரத்துத் துறை அமைச்சர் அ. விஜய் தமிழன் பார்த்திபன் அவர்களின் தலைமையில் 13.07.2026 அன்று தலைமைச் செயலகத்தில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட VLTD உற்பத்தியாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

விரிவான ஆலோசனைக்குப் பிறகு. AIS 140 தரநிலைக்கு இணங்க வழங்கப்படும் வாகன இருப்பிடக் கண்காணிப்பு சாதனம் (VLTD) தமிழ்நாடு முழுவதும் ஒரே சீரான மற்றும் நியாயமான விலையில் விற்கப்படுவதுடன். வாகன உரிமையாளர்களுக்கு வெளிப்படையான, தரமான மற்றும் நம்பகமான சேவை கிடைப்பது உறுதி செய்வதற்கு இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் விவாதிக்கப்பட்டது.

(1) வாகன இருப்பிடக் கண்காணிப்பு சாதனம் (Vehicle Location Tracking Device VLTD)ஒரு ஆண்டு சந்தாவுடன் மற்றும் 2 ஷிமிவி அட்டைகளுடன் ரூ.5,099/ + GSTக்கு மிகாமல் (ii) கூடுதலாக (Additional / Replacement) வழங்கப்படும் ஒவ்வொரு Panic Button-,°‹ Ï.150/- + GSTக்கு மிகாமல் தமிழ்நாட்டில் VLTD பொருத்தப்பட வேண்டும். இதற்கு உற்பத்தியாளர்கள் ஒருமனதாக ஒப்புக்கொண்டார்கள் என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேலை நேரத்தில் அரசியல் நிகழ்ச்சியில் பெண் விஏஓ..!?

விருதுநகர் மாவட்டம், மீசலூர் கிராமநிர்வாக அலுவலராகபணியாற்றி வரும் சுப்புலட்சுமி, பெருந்தலைவர் காமராஜரின்பிறந்தநாளை முன்னிட்டு, விருதுநகர் மாரியம்மன் கோவில் அருகே தவெக தொண்டரணி சார்பில் நடைபெற்ற அன்னதான நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அந்த நிகழ்ச்சியில் விருதுநகர் தவெக எம்எல்ஏ செல்வம் உள்ளிட்ட அக்கட்சியின் நிர்வாகிகளுடன் இணைந்து பொதுமக்களுக்கு உணவு வழங்கும் காட்சிகள் வீடியோ மற்றும் புகைப்படங்களாக சமூக வலைதளங்களில் பரவி வருகின்றன.



அந்த நிகழ்ச்சியில் சுப்புலட்சுமி கட்சி நிர்வாகிகளுடன் இணைந்து அன்னதானப் பணியில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படும் நிலையில் அரசு ஊழியர்கள் அரசியல் சார்பற்ற நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது அரசு நிர்வாகத்தின் அடிப்படைக் கொள்கையாகும். ஆனால், நடிகரின் ரசிகையாக இருப்பது சுப்புலட்சுமி போன்றவர்களின் தனிப்பட்ட விருப்பமாக இருக்கலாம். ஆனால், விஜய் தலைவராக இருக்கும் அரசியல் கட்சியின் நிகழ்ச்சியில் கட்சி நிர்வாகிகளுடன் இணைந்து பங்கேற்று, பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்குவது வேறு விவகாரம். அதனால்தான், அரசு ஊழியர் நடத்தை விதிகள் மீறப்பட்டதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்தச் சர்ச்சைக்கு காரணமாக இருப்பது, கிராம நிர்வாக அலுவலர் சுப்புலட்சுமிபணிநேரத்திலேயேதவெக நிகழ்ச்சியில் கலந்து கொண்டதாகக் கூறப்படுவதுதான். அவர் பணி நேரத்தில் அரசியல் கட்சியின் நிகழ்வில் கட்சி நிர்வாகிகளுடன் இணைந்து செயல்பட்டது உறுதி செய்யப்பட்டால், தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகள், 1973இன் Rule 14ன் படி, அரசு ஊழியர்கள் அரசியல் நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடக்கூடாது.

அரசியல் கட்சியின் செயல்பாடுகளில் பங்கேற்பது, அரசியல் ஆதரவை வெளிப்படுத்துவது அல்லது அரசியல் சார்பை வெளிக்காட்டும் வகையில் நடந்து கொள்வது ஆகியவை ஒழுங்கு நடவடிக்கைக்குரிய விஷயங்களாகக் கருதப்படலாம். அரசு ஊழியர்கள் அரசியல் நடுநிலையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே அந்த விதியின் அடிப்படை நோக்கமாகும்.

சமூக வலைதளங்களில் வெளியாகியுள்ள வீடியோ மற்றும் புகைப்படங்கள் காரணமாக, மீசலூர் கிராம நிர்வாக அலுவலர் சுப்புலட்சுமி தொடர்பாக விருதுநகர் மாவட்ட நிர்வாகம் அல்லது வருவாய்த் துறை விளக்கம் அளிக்குமா? தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகள், 1973இன் Rule 14ன் அடிப்படையில் துறை ரீதியான விசாரணை நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா? என்ற கேள்வி அரசு ஊழியர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது.



அகவை 90 தொட்டும் அயராது தமிழ் வழி இறைப்பணி செய்துவரும் பேராயர் எமிரிடஸ் முனைவர். கி. வி.சின்னப்பா, SDB அவர்களை இந்தியர் ஆன்மீக விடுதலை இயக்கம் தமிழ்நாடு தலைவர் பேராசிரியர் இறைமொழியன் லூர்துசாமி, M.A. M.Phil., மற்றும் பொதுச் செயலாளர் திருத்தொண்டர். தமிழ் நேசன் வில்லியம்ஸ், பொருளாளர். முல்லைத் தமிழன் மற்றும் நிர்வாகத்துறை திரு. ஐசக் பென்னி விஙிகி., ஆகியோர் சந்தித்து இறை வேண்டல் செய்து வாழ்த்தியபோது.




**டெல்லியில் கேள்கராத்தே அமைப்பின் சார்பாக தேசிய கராத்தே போட்டி நடைபெற்றது. இதில் தமிழ்நாடு, டெல்லி, தெலுங்கானா, பஞ்சாப், மத்தியபிரதேசம், உத்திர பிரதேஷ் ஆகிய மாநிலத்தில் இருந்து சுமார் 800 வீரர் வீராங்கனைகள் பங்கு பெற்றனர்.**

# குவாண்டம் தொழில்நுட்பம் குறித்து ஆய்வு செய்ய மனிவளத்திற்கான சிறப்பு அம்சங்கள்

குவாண்டம், கனிணி தொழில் நுட்பம், குவாண்டம் தகவல் தொடர்பு, குவாண்ம் உணர்திறன், அளவியல், குவாண்டம் பொருட்கள், சாதனங்கள் ஆகிய துறைகளில் தேசிய குவாண்டம் இயக்கத்தின் கீழ், நான்கு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த இயக்கத்தை செயல்படுத்துவதன் ஒரு பகுதியாக தேவையான மனிதவளம் குறித்த மதிப்பீடும் செய்யப்பட்டுள்ளது. அதற்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் தேவைகள் அடிப்படையில் இந்த நான்கு மையங்களும் அறிவியல் தொழில்நுட்ப மனிதவளத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

தேசிய குவாண்டம் இயக்கத்தின் கீழ், குவாண்டம் தொழில்நுட்ப ஆராய்ச்சி மேம்பாடு பணிகளுடன் மனிதவள மேம்பாட்டிற்கான பல்வேறு அம்சங்களைச் சேர்ந்த 86 நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் 17 திட்டக் குழுக்கள், 14 தொழில்நுட்ப குழுக்கள், 23 இளங்கலை கற்பித்தல் ஆய்வகங்கள், குவாண்டம் அல்காரிதம்ஸ் தொழில்நுட்ப குழுவின் கீழ், 17 குழுக்களும் அடங்கும். குவாண்டம் தொழில்நுட்பத்தில் ஜப்பான் நாட்டுடன் இணைந்து செயல்படும் வகையில், விருப்ப கடிதம் ஒன்றில் கையெழுத்திடுவதன் மூலம் மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை சர்வதேச அளவிலான ஒத்துழைப்பிற்கு வழி வகுத்துள்ளது.


தேசிய குவாண்டம் இயக்கத்தின் கீழ், பட்டியலிடப்பட்டுள்ள கல்வி நிறுவனங்களில் தமிழகத்தைச் சேர்ந்த 4 உயர்க்கல்வி நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில், சென்னை ஐஐடி, எஸ்இடிஎஸ் சென்னை, ராஜலக்ஷிமி தொழில்நுட்ப கல்வி நிறுவனம் திருவள்ளூர் சென்னை, எஸ்ஆர்ஆம் அறிவியல் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் சென்னை ஆகியவை அடங்கும்.

மாநிலங்களவையில் மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் எழுத்து மூலம் அளித்துள்ள பதிலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

## கல்பாக்கம் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில்

# தொழில்நுட்ப வளர்ச்சிக்கான பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்து

கல்பாக்கம் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தின் (IGCAR) அடல் இன்குபேஷன் மையமான 'AIC IGCAR FAST Foundation' (AIC FAST), "IGCAR தொழில்நுட்பங்களின் பயன்பாடு: ஆய்வகத்திலிருந்து நிலத்திற்கு... மற்றும் விண்வெளிக்கு" என்ற கருப்பொருளில் ஒரு நிகழ்ச்சியை நடத்தியது.




இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட இஸ்ரோவின் பெங்களூருவில் உள்ள யு.ஆர். ராவ் செயற்கைக்கோள் மையத்தின் முன்னாள் இயக்குநர் டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை பேசுகையில், AIC FAST போன்ற 'டீப்டெக்' (Deeptech) இன்கு பேஷன் மையங்களின் ஊக்கத்தால், நாட்டின் துடிப்பான டீப்டெக் ஸ்டார்ட்அப் சூழலுக்கும் மிநிசிகிஸி போன்ற முன்னணி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) மையங்களுக்கும் இடையிலான ஒருங்கிணைப்பின் முக்கியத்துவம் அதிகரித்து வருவதை வலியுறுத்தினார்.

கௌரவ விருந்தினரான மும்பை BARCஇன் தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்புப் பிரிவின் தலைவர் டேனியல் பாபு பி, அணுசக்தித் துறையின் தற்போதைய தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் இன்குபேஷன் வழிமுறைகள் குறித்துப் பேசினார்.

டாக்டர் மயில்சாமி அண்ணாதுரையால் வழிகாட்டப்படும் டீப்டெக் நிறுவனமான 'Big Bang Boom Solutions'உடன், "விண்வெளிச் சூழலில் GPU அடிப்படையிலான கணினிச் செயல்பாட்டிற்கான கதிர்வீச்சுத் தடுப்பு உத்திகளை (Radiation Hardening Strategies) உருவாக்குதல்" தொடர்பான இன்குபேஷன் ஒப்பந்தம் அணுமின் நிலைய இயக்குநர் ஸ்ரீகுமார் ஜி. பிள்ளை மற்றும் AIC FAST இயக்குநர் டாக்டர் என். சுப்பிரமணியன் ஆகியோரால் பரிமாறிக்கொள்ளப்பட்டது. புகழ்பெற்ற ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்களிடமிருந்து தொழில்நுட்பப் பரிமாற்ற உரிமங் களைப் பெறும் மாநிலத்தின் புத்தொழில் நிறுவனங்களின் நலனுக்காக உள்ள பல்வேறு திட்டங்கள் குறித்த விவரங்களை StartupTN-ä,, சேர்ந்த குழுவினர் சமர்ப்பித்தனர்.

IGCARஇன் (கி) தேசிய குவாண்டம் மிஷனுக்குத் தொடர்புடைய LiNbO3 படிக வளர்ச்சித் தொழில்நுட்பம் மற்றும் (B) காப்புரிமை பெற்ற TIG வெல்டிங் தொழில்நுட்பமான 'ஆழமாக ஊடுருவக்குடிய உருகும் கலவை அமைப்பு' ஆகியவற்றுக்கான தொழில்நுட்ப பரிமாற்ற உரிமங்கள், முறையே ஓசூரைச் சேர்ந்த 'Raana Semiconductors Pvt. Ltd.' மற்றும் சென்னையைச் சேர்ந்த 'X10T' ஆகிய டீப்டெக் ஸ்டார்ட்அப் நிறுவனங் களுக்கு IGCAR இயக்குநரால் வழங்கப்பட்டன.

IGCAR வழங்கிய உரிமத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இரண்டு அறிவியல் தயாரிப்புகளான, பெங்களூருவின் 'Tech Science' தயாரித்த அதிஉணர்திறன் கொண்ட கடத்துத்திறன் அளவி (ultrasensitive conductivity meter) மற்றும் பெங்களூருவின் 'First Source Impex' தயாரித்த அதிக அளவு காற்று மாதிரி சேகரிப்பான் (high-volumeairsampler) ஆகியவையும் இந்நிகழ்ச்சியில் IGCAR இயக்குநர் மற்றும் டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை ஆகியோரால் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்த முயற்சியின் மூலம், தொழில்நுட்ப வணிகமயமாக்கலை விரைவுபடுத்தவும், அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் ஸ்டார்ட்அப்களை ஊக்குவிக்கவும், 'விக்சித் பாரத் 2047'ஐ (வளர்ந்த இந்தியா 2047) நோக்கிய 'ஆத்மநிர்பர் பாரத்' (சுயசார்பு இந்தியா) பயணத்திற்குப் பங்களிக்கவும் AIC FAST இலக்கு கொண்டுள்ளது.


# இந்திய அரசு காவிரி சிக்கலில் கர்நாடகாவுக்கு தொடர்ந்து துணை நிற்கிறது: காவிரி உரிமை மீட்புக்குழு

காவிரி உரிமை மீட்புக் குழு கி.வெங்கட்ராமன் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்திய ஆட்சியில் அனாதையாக்கப்பட்ட இனம்தான் தமிழினம் என்பதை உறுதிப்படுத்தும் வண்ணம் மேகேதாது அணை குறித்து நாடாளுமன்றத்தில் இந்திய அரசு கருத்து வெளியிட்டிருக்கிறது

நர்மதை ஆற்றுநீர்ப் பகிர்வு சிக்கலிலோ, கிருஷ்ணா ஆற்று சிக்கலிலோ, துங்கபத்திரா நீர்ப் பகிர்வு சிக்கலிலோ இந்திய அரசு ஏதோ ஒரு மாநிலத்தின் பக்கமாகச் சாய்ந்து செயல்பட்டதில்லை. தீர்ப்பாயங்களும் உச்ச நீதிமன்றமும் அவ்வாறு நடந்து கொண்டதில்லை. ஆனால், ஆரியத்துவ இந்திய அரசு காவிரி சிக்கலில் தொடர்ச்சியாக கர்நாடகத்தின் இனவெறி அடாவடிக்குப் பக்கத் துணையாக இருந்துவருகிறது.

தமிழ்நாட்டுக்கு காவிரி தீர்ப்பாயம் 205 ஆ.மி.க. என்று இடைக்காலத் தீர்ப்பில் தடாலடியாகக் குறைத்தது. இறுதித் தீர்ப்பில், 192 ஆ.மி.க என்று இன்னும் வெட்டியது. மேல் முறையீட்டு வழக்கில் உச்ச நீதிமன்றம் தன் பங்கிற்கு மேலும் குறைத்து 177.25 ஆ.மி.க. என்று அறிவித்தது. இந்தத் தீர்ப்பும் கூட 15 ஆண்டுகள்தான் உயிரோடு இருக்கும் . அதன் பிறகு மீளாய்வு செய்ய வேண்டும் என்று அறிவித்தது.

இந்த அநீதித் தீர்ப்புகள் ஒவ்வொரு முறை வந்தபோதும்,



தமிழ்த்தேசியப் பேரியக்கமும் காவிரி உரிமை மீட்புக் குழுவும் தீர்ப்பு நகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட பல போராட்டங்களை நடத்தின.

கர்நாடக அணைகள் நிரம்பி வழிந்தால் அந்த உபரி நீரைதான் கர்நாடகம் திறந்துவிட்டு வருகிறது. இது நாடறிந்த உண்மை. இப்போது அந்த உபரி நீரையும் தமது எல்லையிலேயே மடக்கிப் போடத்தான் மேக்கேதாட்டில் அணைகட்ட முயல்கிறது கர்நாடகம் தனக்குரிய பங்கு நீரை தாண்டி உபரி நீரை பயன்படுத்த கட்டமைப்பு எதையும் ஏற்படுத்த தீர்ப்பின் பத்தி 18 அனுமதி அளிக்கவில்லை அமைச்சர் சௌத்திரி சொல்லும் விளக்கம் தீய உள்நோக்கம் உள்ளது.

முல்லைப் பெரியாறு உள்ளிட்ட எந்த ஆற்று நீர் வழக்கிலும் சொல்லாத வகையில் தீர்ப்புக்கு 15 ஆண்டுகள்தான் வாழ்நாள் என்று வரம்புகட்டியிருப்பதும் குழப்பமான சொற்களை திட்டமிட்டே பயன்படுத்தி இருப்பதும், இந்தியக் கட்டமைப்பே தமிழினப் பகை கட்டமைப்புதான் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

தொடக்கத்திலிருந்தே தமிழ்நாட்டின் தி.மு.க. அ.தி.மு.க. அரசுகள் காவிரி வழக்கை ஏனோ தானோ என்று நடத்திய முறை இந்த இன ஆதிக்கத்திற்கு தோதாக அமைந்தது.

இப்போது கர்நாடகம் மேகேதாது அணை கட்டுவதில் தீவிர முனைப்புக் காட்டிவரும் நிலையில் அந்த அணை கட்ட கர்நாடகம் தமிழ்நாட்டின் இசைவைப் பெற வேண்டிய சட்டத்தேவை இல்லை என விளக்கமளிப்பது கர்நாடகத்தின் அடாவடிக்கு வெளிப்படையாகப் பச்சைக்கொடி காட்டுவதாகும்.

தமிழ்நாடு அரசு இந்திய அரசின் இந்த வஞ்சகத்தை எதிர்த்து உறுதியாக நிற்க வேண்டும்.

தமிழர்கள், குறிப்பாக தமிழ்நாட்டு உழவர்களும் இளையோரும் காவிரி உரிமை மறுப்பு என்பது தமிழின அழிப்புத் திட்டத்தின் ஒரு பகுதி என்பதைப் புரிந்து கொண்டு களம் காண வேண்டும் என காவிரி உரிமை மீட்புக்குழு சார்பில் கேட்டுக்கொள்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## எம்.சி.சி.பப்ளிக் பள்ளியின் 10ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு

# மாணவர்கள் ஒரே நிகழ்வில் 56 உலகச் சாதனைகளை நிகழ்த்தி புதிய வரலாறு

சென்னை சேத்துப்பட்டில் செயல்பட்டு வரும் எம்.சி.சி. பப்ளிக் பள்ளி தனது 10ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு ஒரே நிகழ்வில் 56 உலகச் சாதனைகளை நிகழ்த்தி புதிய வரலாறு படைத்துள்ளது

131 ஆண்டுகள் பாரம்பரியம் கொண்ட எம்.சி.சி. அசோசியேஷனின் கீழ் இயங்கும் முன்னணி சிபிஎஸ்இ கல்வி நிறுவனமான எம்.சி.சி. பப்ளிக் பள்ளியில் நடைபெற்ற MCC World Records Festival 2026ல் 1,137க்கும் மேற்பட்ட மாணவர்கள், 90 ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் இணைந்து பங்கேற்றனர்.

இதுகுறித்து செய்தியாளர்களை சந்தித்த பள்ளியின் முதல்வர் டாக்டர் ஜோலி சஜி மத்துயூ, இந்த விழாவில் 6 குழு உலகச் சாதனைகள் மற்றும் 50 தனிநபர் உலகச் சாதனைகள் என மொத்தம் 56 உலகச் சாதனைகள் படைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், இந்தச் சாதனைகள் Elite World Records, Asian Book of Records, Indian Book of Records மற்றும் Long Tamilan Book of Records ஆகிய அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இதில்மாணவர்கள் எழுதிய



புனைகதை நூல் தொடர்கள், 18 மணி நேர ரோபோடிக்ஸ் மராத்தான், 24 மணி நேர தொடர் வேதாகம வாசிப்பு, பெருமளவிலான மனக்கணக்கு நிகழ்ச்சி, காய்கறி அச்சுக் கலை மற்றும் குடைகளுடன் கூடிய விளையாட்டு அணிவகுப்பு உள்ளிட்ட நிகழ்வுகள் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தன.

இந்த உலகச் சாதனையை நினைவுகூரும் வகையில், உலகச் சாதனையாளர்களுகு சான்றிதழ் மற்றும் பரிசளிப்பு விழா வரும் ஆகஸ்ட் 1ஆம் தேதி எம்.சி.சி. பப்ளிக் பள்ளி வளாகத்தில் நடைபெறவுள்ளதாக பள்ளி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்ச்சியில் மாணவர்கள் தங்களது பல்வேறு திறமைகளையும் வெளிப்படுத்தி பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றனர்.

“ஒரே விழாவில் 56 உலகச் சாதனைகளை நிகழ்த்தி கல்வி, அறிவியல், கலை மற்றும் திறமைகளை ஒருங்கிணைத்து புதிய மைல்கல்லை எட்டியுள்ள எம்.சி.சி. பப்ளிக் பள்ளிக்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டுகளைத் தெரிவித்து வருகின்றனர். இந்த நிகழ்ச்சியில் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தமிழ்நாடு மினி லாரி உரிமையாளர்கள், விநியோகஸ்தர்கள் சங்க ஆலோசனைக் கூட்டம்



தமிழ்நாடு மினி லாரி உரிமையாளர்கள் மற்றும் இந்தியன் பேக்கர்ஸ் அண்ட் மூவர்ஸ் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கம் மற்றும் அகில இந்திய மோட்டார் சர்வீஸ் மோட்டார் வெளிச்சம் ஆகிய சங்கங்கள் இணைந்து சென்னை பல்லாவரத்தில் உள்ள தனியார் விடுதியில் ஆலோசனைக் கூட்டம் மாநிலத் தலைவர் எ.கணேஷ் பங்கேரா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாநில பொது செயலார் ஆர்.இ.சேவராஜன் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப் பாளராக கலந்து கொண்ட அகில இந்திய மோட்டார் சர்வீஸ் மோட்டார் வெளிச்சம் நிறுவனத் தலைவர் ஜெயக்குமார் கலந்துகொண்டு சிறப்பித்தார். இக்கூட்டத்திற்கு பல்வேறு மாநிலம் மற்றும் மாவட்டங்களில் இருந்து நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அதன்

பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அகில இந்திய மோட்டார் சர்வீஸ் மற்றும் மோட்டார் வெளிச்சம் நிறுவனர் தலைவர் ஜெயக்குமார் மற்றும் தமிழ்நாடு மினி லாரி உரிமையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் சங்க மாநிலத் தலைவர் கணேஷ் பங்கேரா ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது, எங்களுடைய நீண்ட கால கோரிக்கையில் முதலாவதாக தமிழ்நாட்டில் 50 இடங்களில் உண்டு உறைவிட வசதியுடன் கார் பார்க்கிங் வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என்றும், பிரதமர் நரேந்திர மோடி 6 மாதத்திற்கு முன்பு ஆயிரம் இடங்களில் பார்க்கிங் டெர்மினல் ஏற்படுத்தி தருவதாகவும் இதன் மூலம் விபத்துகளை தவிர்க்க முடியும் என்றும் இதை மாநில அரசு உடனடியாக மத்திய அரசின் பார்வைக்கு எடுத்து செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

மேலும் குடித்துவிட்டு வாகனம் ஓட்டும் ஓட்டுநருடன் வாகனத்தை பறிமுதல் செய்வதால் லாரியும் , லாரி உரிமையாளர்களும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். என்றும் தவறு செய்யும் ஓட்டுநர் மீது மட்டும் வழக்குப்பதிவு செய்ய வேண்டும். லாரி உரிமையாளர் மீது வழக்கு பதிய கூடாது என்று கூறினார்.

மேலும் வண்டி விபத்திற்குள்ளானால் முறையான விசாரணை மேற்கொண்டு முதல் தகவல் அறிக்கை அளித்து யார் மீது தவறு என்பதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர ஓட்டுநரை கைது செய்யக் கூடாது. மேலும் லாரியில் சரக்கு ஏற்றி மற்றும் இறக்கும் இடங்களில் ஆன்லைன் அபராதங்கள் வசூலிக்கக் கூடாது. மேலும் பைனான்ஸ் கம்பெனிகள் வண்டியை பறிமுதல் செய்யும் போது வண்டியில் உள்ள பொருட்களை மற்றொரு வாகனத்தில் மாற்றி அனுப்ப ஆவண செய்ய வேண்டும் என்றும் காலாவதியான சுங்கச்சாவடிகளை உடனடியாக நீக்க வேண்டும் என்றும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் விரைவில் தமிழக முதல்வரை சந்தித்து இதுபற்றி மனு கொடுக்க உள்ளோம் என்று கூறினார்கள்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை இந்தியன் பேக்கர்ஸ் அண்ட் மூவர்ஸ் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்க மாநிலத் தலைவர் கே.சுரேஷ் பாபு, செயலாளர் பன்னீர்,கௌரவத் தலைவர் வைத்தியநாதன், துணைத் தலைவர் ரங்கநாதன், மாநில ஒருங்கிணைப்பாளர் பி.சாமிநாதன், கௌரவத் தலைவர் சுப்பிரமணி, பொருளாளர் கதிர்வேல், இணை செயலாளர் சதிஷ் குமார், இணை பொருளர் தமிழ் அரசு ஆகிய சங்க நிர்வாகிகளுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறோம் என்று கூறினார்கள். இதில் சங்க நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# முதல்வர் பிறந்தநாள் கால்பந்து வெட்ரன் போட்டி

## விஜய்பிரபு எம்எல்ஏ பரிசு வழங்கினார்



தமிழக வெற்றி கழகம் சார்பில் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு, திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட மகளிர் அணி இணை அமைப்பாளர் வி.எம்.சுஜாமணி முருகன் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம் வெள்ளானூர் ஊராட்சியில் முதலாம் ஆண்டு ஒருநாள் கால்பந்து வெட்ரன் போட்டியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட கழக செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் எம்.எல். விஜய்பிரபு கலந்து கொண்டு, போட்டியில் வெற்றி பெற்ற இரு அணிகளுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

இதில் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெய்சங்கர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களை வாழ்த்திப் பேசினார்.

தொடர்ந்து மகளிர் அணி இணை அமைப்பாளர் வி.எம்.சுஜாமணி முருகன் சிறப்பு விருந்தினர்களுக்கு சால்வை அணிவித்து மரியாதை செய்தார்.

இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் லோகேஷ், ஜெகன், விஜயகுமார், ரஞ்சித், விஜய், பொன்னிவளவன், ரகு ஆகியோருடன் மகளிர் அணி நிர்வாகிகள் திவ்யா, ரேவதி, ஷோபனா, சரிதா, ரெஜினா, சிவகாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

இந்த போட்டிக்கான அனைத்தும் வி.எம்.சுஜாமணி முருகன் அவர்கள் மேற்கொண்டிருந்தார். விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிக்கும் "போதைக்கு இல்லை விளையாட்டுக்கு ஆம்" வகையில் நடைபெற்ற இந்த கால்பந்து போட்டி பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகளின் வரவேற்பைப் பெற்றது. இந்த நிகழ்ச்சியில் பலரும் கலந்து கொண்டனர்.



சேலத்தில் கால் மேல் கால் போட்டப்படி இருப்பதால் 5 ஆண்டுகளுக்கு மேல் திறக்கப்படாமல் மூடி வைக்கப்பட்டுள்ள அம்பேத்கர் சிலையை திறக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். அம்பேத்கரை ஒரு சாதிய தலைவராக சுருக்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது; சிலைகளை திறக்க முடியாத நிலை தமிழகம் முழுவதிலும் உள்ளது என்று அமைச்சர் வன்னி அரசு உறுதிபட கூறினார்.

### தமிழக வெற்றி கழகம் திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட மகளிர் அணி சார்பில்

# திருவள்ளூரில் வெட்ரன் கால்பந்து போட்டி



தமிழக வெற்றி கழகம் சார்பில் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட மகளிர் அணி இணை அமைப்பாளர் வி.எம்.சுஜாமணி முருகன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம் வெள்ளானூர் ஊராட்சியில் முதலாம் ஆண்டு ஒருநாள் கால்பந்து வெட்ரன் போட்டியை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட கழக செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் எம்.எல். விஜய்பிரபு கலந்து கொண்டு, போட்டியில் வெற்றி பெற்ற இரு அணிகளுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

இதில் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெய்சங்கர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களை வாழ்த்திப் பேசினார். தொடர்ந்து மகளிர் அணி இணை அமைப்பாளர் வி.எம். சுஜாமணி முருகன் சிறப்பு விருந்தினர்களுக்கு சால்வை அணிவித்து மரியாதை செய்தார்.

இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் லோகேஷ், ஜெகன், விஜயகுமார், ரஞ்சித், விஜய், பொன்னிவளவன், ரகு ஆகியோருடன் மகளிர் அணி நிர்வாகிகள் திவ்யா, ரேவதி, ஷோபனா, சரிதா, ரெஜினா, சிவகாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

இந்த போட்டிக்கான அனைத்தும் வி.எம்.சுஜாமணி முருகன் அவர்கள் மேற்கொண்டிருந்தார். விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிக்கும் "போதைக்கு இல்லை விளையாட்டுக்கு ஆம்" வகையில் நடைபெற்ற இந்த கால்பந்துபோட்டி பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகளின் வரவேற்பைப் பெற்றது. இந்த நிகழ்ச்சியில் பலரும் கலந்து கொண்டனர்.

### ஆவடி காவல் ஆணையரகம் - சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்கம் சார்பில்

# செங்குன்றத்தில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலம்




போதையில்லா தமிழகத்தை உருவாக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வரும் தமிழ்நாடு முதல்வர்.சி.ஜோசப் விஜய் உத்தரவின் பேரில் ஆவடி காவல் ஆணையரகம், சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்கம் இணைந்து 1000த்திற்கும் மேற்பட்ட பள்ளி - கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்துகொண்ட போதை ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் செங்குன்றம் காமராஜர் சிலையிலிருந்து பேருந்து நிலையம் வழியாக கூட்ரோடு நேதாஜி சிலை வரை நடைபெற்றது.

ஊர்வலத்திற்க்கு ஆவடி காவல் ஆணையரக இணை ஆணையர். ஆர்.சிவக்குமார் தலைமையேற்று கொடியசைத்து துவக்கி வைத்து பேசும்போது. போதையால் பல குற்றங்கள் உருவாகிறது. போதைபொருட்களை பயன்படுத்தக்கூடாது. போதையில்லா தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என முதல்வர் தீவிர முயற்சி எடுத்து அதிரடி நடவடிக்கை எடுத்து வருகிறார். அதற்கு உங்கள் ஒத்துழைப்பு தேவை என்றார். தொடர்ந்து போதையில்லா தமிழகத்தை உருவாக்கும் உறுதி மொழி ஏற்கப்பட்டது.

செங்குன்றம் காவல் சரக உதவி ஆணையர் பிராங்க் டி ரூபன், மீஞ்சூர் காவல் ஆய்வாளர் ஆறுமுகம், செங்குன்றம் போக்குவரத்து காவல் ஆய்வாளர் சந்திரமவுலி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்க மாவட்டத் தலைவர் எம்.முகம்மது அபுபக்கர், இயற்கை பாதுகாப்புக் கூட்டமைப்பு மாநிலத் தலைவர் இ.மாரியப்பன், மாநில அமைப்பாளர் செங்குன்றம் காஜா, தமிழ் சிங்கம் லயன்ஸ் சங்கச் செயலாளர் டெக்கரேட்டர் பி.சேகர் ஆகியோர் நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தனர்.

இந்நிகழ்வில் லயன்ஸ் சங்க மண்டலத் தலைவர் கருப்பசாமி, வட்டாரத் தலைவர் விநாயகம், சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்கச் செயலாளர் எஸ்.கோபி, பொருளாளர் ஜீலான், ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட் சிட்டி துணைத்தலைவர் சக்தி, ஆர்.பி. கோத்தி ஜெயின் மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர் மோ. மகாலட்சுமி, சமூக சேவகர் அப்துல் காதர், விவேகானந்தா மெட்ரிக் பள்ளி முதன்மை நிர்வாக அதிகாரி அருண் மொழி வர்மன், த.வெ.க. நகரச் செயலாளர் கே.விஜி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

ஊர்வலத்தில் இயற்கை பாதுகாப்புக் கூட்டமைப்பு, ஆர்.பி. கோத்தி ஜெயின் மகளிர் கல்லூரி, பிரசாந்த் மருத்துவமனை, ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட் சிட்டி, சில்ரன்ஸ் பேரடைஸ், எலைட், குட்வேர்ட், கலைவாணி, விவேகானந்தா, ஆயிஷா, இலாஹி ஆகிய பள்ளி மாணவ, மாணவிகள் 1000த்திற்குமேல் கலந்து கொண்டனர்.

# சர்வதேச படகு பயணத்தை வெற்றிகரமாக முடித்த முப்படைகளின் முதல் பெண்கள்

## மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் பாராட்டு

இந்திய ராணுவப் படகான 'ஐஎஸ்வி திரிவேணி'யில் 'சமுத்திர பிரதக்ஷிணா' என்ற முப்படைகளின் முதலாவது அனைத்துப் பெண்கள் சர்வதேசப் படகு பயணத்தை வெற்றிகரமாக முடித்துத் தாயகம் திரும்பிய முப்படைகளைச் சேர்ந்த 9 பெண் அதிகாரிகளுக்கு, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்தார்.

புதுதில்லியில் அதிகாரிகளுடன் உரையாடிய பாதுகாப்புத் துறை அமைச்சர், நான்கு பெருங்கடல்கள் வழியே சுமார் 25,500 கடல் மைல்களை உள்ளடக்கிய 314 நாட்கள் கடல் பயணத்தை வெற்றிகரமாக முடித்த அக்குழுவின் தைரியத்தையும் மன உறுதியையும் பாராட்டினார். இப் பயணத்தை பெண் சக்திக்கான ஒரு சான்றாகவும், ஒவ்வொரு இந்தியருக்கும் ஊக்கமளிக்கும் முப்படைகளின் இணைப்பு மற்றும் ஒருங்கிணைப்பிற்கான சிறந்த உதாரணமாகவும் அவர் விவரித்தார்.

பெண் அதிகாரிகள் தங்கள் அனுபவங்களை திரு. ராஜ்நாத் சிங்குடன் பகிர்ந்து கொண்டனர். அப்போது, இந்தப் பயணத்தின் சவாலான தன்மை தங்களது கடற்பயணத்தை மறக்க முடியாததாகவும் அதே வேளையில் பயனுள்ளதாகவும் மாற்றியது என்று குறிப்பிட்டனர். நாட்டிற்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்ற தங்களின் தளராத அர்ப்பணிப்பே தங்களை ஊக்கப்படுத்தியதாகவும், அதுவே மகத்தான உடல் மற்றும் மன சவால்களை முறியடிக்க உதவியதாகவும் அவர்கள் தெரிவித்தனர். அதிகாரிகளின் இந்த அர்ப்பணிப்பு தனக்கு ஊக்கமளித்து, தனது சொந்த உறுதியை மேலும் வலுப்படுத்தியதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் குறிப்பிட்டார். மேலும், அவர்களின் இந்த சாதனை,



உறுதியான நம்பிக்கையும் மன உறுதியும் இருந்தால் வாழ்க்கையில் எந்த இலக்கையும் அடைய முடியும் என்பதைக் காட்டுகிறது என்றும் அவர் கூறினார்.

'சமுத்திர பிரதக்ஷிணா'வின் வெற்றி, பெண்களால் கடினமான ராணுவப் பணிகளைச் செய்ய முடியாது என்ற பழமைவாத எண்ணங்களை உடைத்தெறிந்துள்ளதாக திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

# சைதாப்பேட்டை ஜீனிஸ் சாலையில் உயிர்பலி கேட்கும் மின்சார ஒயர்



சென்னை சைதாப் பேட்டையில் ஜீனஸ் சாலை உள்ளது. இங்கு அரசு பொது மருத்துவமனை, மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனை, மீன் மார்க்கெட், அரசு கட்டிடங்கள், ரயில் நிறுத்தம் ஆகியவை இயங்கி வருகின்றன. இதனால் மக்கள் அதிக அளவில் சென்று வரும் பகுதியாக இது திகழ் கிறது.

இங்கு தற்போதுதான் பல ஆண்டுகளாக சாலையை ஆக்கிரமித்திருந்த கடைகள் அகற்றப்பட்டன. இதனால் மக்கள் நிம்மதி பெருமூச்சு விட் டுள்ளனர். ஆனால் அதற்குள் ஒரு பெரிய ஆபத்தை அவர்கள் உணரத் தொடங்கியுள்ளனர்.

அதாவது தற்போது இந்த பகுதியில் மழைநீர் வடிகால் வாய் பணிகள் நடைபெற்றன. இதற்கான பணிகள் முடிவடைந் ததும் மிகப்பெரிய மின்சார ஒயர்களை அப்படியே சாலை யின் மேலேயே போட்டு சிமெண்ட் கற்களை போட்டு பூசிவிட்டு சென்றுவிட்டனர். இது என்னவோ அவர்களுக்கு தங்கள் பணி முடிந்துவிட்டது என்பது போல் உள்ளது.

ஆனால் இதன் ஆபத்தை அவர்கள் உணரவில்லை. மருத்துவமனைக்கும், மார்க்கெட்டுக்கும், ரயில் நிலையத்துக்கும் செல்லும் பயணிகள் இந்த சாலையில் செல்லும் போது ஏதாவது அசம்பாவிதம் ஏற்படுவது அவர்களுக்கு தெரியுமோ என்னவோ புரியவில்லை. ஆபத்தை உணராத மக்கள் இதனை மிதித்தபடியும் செல்வது கூடுதல் வேதனை.

வரவிருப்பது மழைக் காலம். மழைநீர் சாலையில் பெக் கெடுத்து ஓடக்கூடிய காலம். மின்னல் அடிக்கும்போதோ, அதிக மின்சாரம் ஏற்படும் போதோ இந்த சாலையில் உள்ள மின்சார ஒயர்கள் வெடித்து மின்சாரம் பாயும் அபாயம் உள்ளது.

இந்த சாலை வழியாகத்தான் ஏராளமான மின்சார அதிகாரிகள் வந்து செல்கின்றனர். அவர்களின் கண்களில் இது படவில்லையா? ஒவ்வொரு அலட்சியத்தால்தான் நாம் ஏராளமான உயிர்களை இழக்கின்றோம். அலட்சியப்போக்கிற்கு அதிகாரிகள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

சாலையில் உயிர்பலி கேட்கும் வகையில் உள்ள இந்த மின்சார ஒயர்களை முறையாக அப்புறப்படுத்தி பாதுகாப்பான வகையில் அமைக்க வேண்டும். புதிதாக பொறுப்பேற்றுள்ள தமிழக அரசின் மின்சாரத்துறை அமைச்சர் இதனை கண்ணுற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# வங்கிகளுக்கு புது ரூல்ஸ் போட்ட ரிசர்வ் வங்கி

வங்கிச் சேவையில் வெளிப்படைத் தன்மை மற்றும் வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்தும் வகையில் டெபாசிட் வட்டி விகிதம் தொடர்பான விதிமுறைகளை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.

ஒரே வங்கியின் வெவ்வேறு கிளைகளில் ஒரே தொகையை டெபாசிட் செய்யும் வாடிக்கையாளர்கள் வட்டி விகிதங்களில் சிறிய வேறுபாடுகளை அல்லது பாரபட்சங்களை எதிர்கொள்வது அடிக்கடி காணப்படுகிறது. எந்தவொரு வங்கிக் கிளைகளிலும் ஒரு வாடிக்கையாளர் அதே தொகையை ஒரே நாளில் டெபாசிட் செய்தால், அவர்களுக்கு இனி சீரான வட்டி விகிதம் வழங்கப்படும் என்று ரிசர்வ் வங்கி இப்போது தெளிவுபடுத்தியுள்ளது. இந்த உத்தரவைத் தொடர்ந்து, வட்டி விகிதங்கள் தொடர்பாக வெவ்வேறு கிளைகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு இடையில் வங்கிகளால் இனி பாரபட்சம் காட்ட முடியாது.





வங்கிச் சேவையில் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்க ரிசர்வ் வங்கி அனைத்து வங்கிகள் மீது மற்றொரு கடுமையான விதிமுறையை விதித்துள்ளது. வங்கிகள் ஒவ்வொரு வேலை நாளிலும் காலை 10 மணிக்குள் மொத்த வைப்புத்தொகைக்கான புதிய வட்டி விகிதங்களை தங்கள் இணையதளத்தில் வெளியிட வேண்டும். இதற்கு வங்கிகளுக்கு 10 நிமிடங்கள் மட்டுமே அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதாவது காலை 10:10 மணிக்குள் கட்டாயமாக வட்டி விகிதங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் பணத்தை டெபாசிட் செய் வதற்கு முன்பாக, தங்களுக்கு இன்று கிடைக்கப் போகும் வட்டி விகிதத்தை முன்கூட்டியே தெரிந்து கொள்ள முடியும்.

பெரிய கார்ப்பரேட் நிறுவ னங்களின் டெபாசிட்தாரர்களும் நிதிக்குழுக்களுமே (Treasury teams) இந்த மாற்றங்களால் முதன்மையாகப் பயனடைவார்கள். இவர்கள் 3 கோடி ரூபாய் மற்றும் அதற்கு மேற்பட்ட தொகையை மொத்தமாக வைப்புநிதித் தொகையாக முதலீடு செய்பவர்கள் ஆவர். இதுவரை, அவர்களுக்கு வழங்கப்பட்ட வட்டி விகிதம் வங்கி யுடனான அவர்களின் உறவு மற்றும் அவர்களின் நிதி அதிகாரியின் பேரம் பேசும் திறனைப் பொறுத்து ஓரளவு நிர்ணயிக்கப்பட்டு வந்தது. ஆனால், அக்டோபர் முதல் இந்த வட்டி விகிதம் தினமும் காலையில் பகிரங்கமாக வெளியிடப்படும். ஒரே நாளில், அதே தொகையை முதலீடு செய்யும் அனைவருக்கும் ஒரே மாதிரியான வட்டி விகிதம் வழங் கப்படும்.

பெரிய அளவில் நிலையான வைப்பு நிதிகளை முதலீடு செய்யும் உயர் நிகர மதிப்புடைய தனிநபர்களும் (HNI) இந்த விதிமுறையால் பயன டைவார்கள். ஒரு குறிப்பிட்ட நாளில் 3 கோடி ரூபாய் வைப்பு நிதிக்கு ஒரு வங்கி குறிப்பிட்ட வட்டி விகிதத்தை வழங்கினால் அந்த நபர் நீண்டகால வாடிக்கையாளரா அல்லது புதிய வாடிக்கையாளரா என்பதைப் பொருட் படுத்தாமல், அன்றைய தினம் அதே தொகையை முதலீடு செய்யும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் வங்கி அதே வட்டி விகிதத்தை வழங்க வேண்டும்.

# ரூ. 43,865 கோடி கடனில் அரசு போக்குவரத்து கழகங்கள்: நஷ்டத்தை போக்க தமிழ்நாடு அரசு அதிரடி முடிவு



சமீபத்தில் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையில் அரசுக்கு போக்குவரத்து கழகங்களுக்கு ரூ. 43,865 கோடி கடன் இருப்பதாக கூறப்பட்டது. இந்நிலையில் அரசு போக்குவரத்து கழகத்தின் வாயிலாக வருவாயை பெருக்குவதற்கு புதிய திட்டங்களை கொண்டு வருவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பொது போக்குவரத்துக்கு அரசு பேருந்துகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை பொதுமக்களுக்கு மிகப்பெரிய அளவில் பலனளிக்கின்றன. தினந் தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் தமிழ்நாட்டில் அரசு பேருந்துகளில் பயணிக்கின்றன. இதனிடையில் அரசு போக்குவரத்து கழகங்கள் நஷ்டத்தில் இயங்குவதாகவும், கடனில் இருப்பதாகவும் கூறப்பட்டது. இந்நிலையில் அரசு பேருந்துகள் மூலமாக வருவாயை பெருக்குவதற்கு தமிழ்நாடு அரசு புதிய முடிவு ஒன்றினை எடுத்துள்ளது.

தமிழகத்தில் தினந்தோறும் எட்டு அரசு போக்குவரத்து கழகங்கள் சார்பாக 21,515 பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதனிடையில் அரசு பேருந்துகள் நஷ்டத்தில் இயங்குவதாக தெரிவிக்கப்பட்டது. சமீபத்தில் தமிழ்நாடு அரசு அரசு போக்குவரத்து கழகம் தொடர்பாக வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில், 43,865 கோடி ரூபாய் கடன் அரசு போக்குவரத்து கழகங்களுக்கு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இதனால் போக்குவரத்து கழகம் நஷ்டத்தில் இயங்குவதாக கூறப்ப ட்டது.

இந்நிலையில் வருவாயை பெருக்குவதற்கு தமிழ்நாடு அரசு புதிய திட்டங்களை செயல்படுத்துதற்கு முடிவு செய்துள்ளது. அந்த வகையில் பார்சகள் ஏற்றி செல்லும் வசதியுடன் புதிய பஸ்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பான ஆய்வுகளில் போக்குவரத்து துறை அமைச்சர் பார்த்திபன் ஆய்வு செய்து வருகிறார். இதற்கிடையில் அரசு போக்குவரத்து கழக அதிகாரிகள் இது தொடர்பாக சில தகவல்களை பகிர்ந்துள்ளனர்.

அதன்படி, அரசு பேருந்துகளில் கட்டணங்களை உயர்த்தாமல் பிற வழிகளின் வாயிலாக வருவாயை பெருக்குவதற்கு புதிய திட்டங்களை செயல்படுத்த முடிவு எடுத்துள்ளோம். அந்த வகையில் போக்குவரத்து கழகங்களில் உள்ள காலி இடங்களை நீண்ட நாட்களுக்கு தனியாருக்கு குத்தகைக்கு விட திட்டமிட்டுள்ளோம். அதே போல் சூரியசக்தி மின் உற்பத்தி திட்டங்களை செயல்படுத்துவது, பஸ் நிலையங்களில் வணிக வளாகம் அமைப்பது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட இருப்பதாக தெரிவித்தனர்.

மேலும் உடனடியாக செயல்படுத்தும் விதமாக, வெளியூர் செல்லும் அரசு விரைவு பேருந்துகளில் பார்சல் எடுத்து செல்வதற்கான பணிகளை துவங்குவதற்கு முடிவு செய்திருக்கிறோம். தங்களுடைய பயணித்தின் போது கையில் எடுத்து செல்ல முடியாத அளவுக்கான பெரிய பொருட்கள், லக்கேஜ்களை பயனியர்கள் 'பார்சல்' என புக்கிங் செய்து கொள்ளலாம் என போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்காக கட்டணம் வசூலிக்கவும் திட்டமிட்டுள்ளது.

பயணிகள் பார்சல் என்று புக்கிங் செய்து, அதற்கான கட்டணத்தை செலுத்தி கொள்ளலாம். நியாயமான முறையில் இதற்கான விலை இருக்கும் எனவும் கூறப்படுகிறது. மேலும் இந்த திட்டத்துக்காக பதிய பஸ்களுடைய பின்பகுதியில் பிரேத்யகமாக இடம் ஒடுக்கப்படும். முதல் கட்டமாக இந்த திட்டத்தினை சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களை இயக்கும் ஆயிரம் அரசு விரைவு பஸ்களில் செயல்படுத்த திட்டமிட்டு இருக்கிறோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

ஆரம்பத்தில் 1,000 அரசு விரைவு பஸ்களில் கிடைக்கும் வரவேற்பினை தொடர்ந்து, இந்த திட்டம் விரிவுப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசு பஸ்களில் நஷ்டத்தினை போக்குவதற்காக தமிழ்நாடு அரசு கொண்டு வரவுள்ள இந்த பார்சல் வசதி போக்குவரத்து கழகத்திற்கு லாபத்தினை அளிக்கும் எனவும் கூறப்படுகிறது.

# ஹாட்ரிக் கோல் அடித்த லியோனல் மெஸ்ஸி



கால்பந்து உலகக்கோப்பை தொடரில், 6 சீசன்களில் விளையாடிய முதல் வீரர் என்ற வரலாற்று சாதனையை லியோனல் மெஸ்ஸி படைத்துள்ளார். அடுத்து, நடப்பு சீசனில் கிறிஸ்டியானோ ரொனால்டோவும் அறிமுகம் ஆகி, இந்த சாதனையை சமன் செய்ய உள்ளார்.

200ஆவது போட்டி: அர்ஜெண்டினாவுக்காக 200ஆவது போட்டியில் ஆடிய லினோனல் மெஸ்ஸி, அல்ஜிரியா அணிக்கு எதிராக எப்படி செயல்படப் போகிறார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. இத்தொடருக்கு முன், மெஸ்ஸிக்கு காலில் தசை பிடிப்பு பிரச்சினை இருந்தது. அதையும் தாண்டிதான் மெஸ்ஸி, தற்போது உலகக் கோப்பையில் ஆட வந்துள்ளார். 38 வயதாகும் அவர், முதல் போட்டியில், அதுவும் அர்ஜெண்டினாவுக்காக 200ஆவது போட்டியில் எப்படி விளையாடப் போகிறார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

போட்டி நடைபெற்ற கன்ஸஸ் மைதானத்தில், பெரும்பாலான ரசிகர்கள் 10 எண் கொண்ட ஜெர்ஷியை அணிந்து, மெஸ்ஸிக்கு ஆதரவை வெளிப்படுத்தினார்கள். மொத்தம், 69.045 பார்வையாளர்கள் கூடியிருந்தனர்.

இந்நிலையில், மெஸ்ஸி தொடர்ச்சியாக அபாரமாக செயல்பட்டு, 17ஆவது நிமிடத்திலேயே முதல் கோல் அடித்து அசத்தினார். அடுத்து, முதல் பாதியில் எந்த வீரராலும் கோல் அடிக்க முடியவில்லை. முதல் கோல் அடித்ததும், மெஸ்ஸி கண் கலங்கினார். மேலும், ரசிகர்கள் சிலரும் ஆனந்த கண்ணீரை வெளிப்படுத்தினார்கள்.

பிறகு, முதல் பாதி ஆட்டத்தில் எந்த வீரரும் கோல் அடிக்கவில்லை. முதல் ஆதி ஆட்டம் முடிந்து, வீரர்கள் பெவிலியனுக்கு திரும்பியபோது மெஸ்ஸிக்கு ரசிகர்கள் உற்சாக வரவேற்பை கொடுத்தனர். இதனைத் தொடர்ந்து, இரண்டாவது பாதி ஆட்டம் துவங்கிய நிலையில், 60ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி மற்றொரு கோலை அடித்தார். பிறகு, 72ஆவது நிமிடத்திலும் கோல் அடித்து, 38 வயதில் உலகக் கோப்பையில் ஹாட்ரிக் கோல் அடித்த வீரர் என்ற வரலாற்று சாதனையை படைத்தார்.


இதன்மூலம், உலகக் கோப்பை வரலாற்றில், 16 கோல்களை அடித்து, அதிக கோல்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் முதல் இடத்தை பகிர்ந்து கொண்டார். ஜெர்மனி லெஜண்ட் வீரர் மிரோஸ்லோவ் கோல்ஸேவும் 16 கோல்களை அடித்து முதல் இடத்தில் இருக்கிறார். இவரது சாதனையை யாரும் நெருங்க முடியாத நிலைமை இருந்தது. இந்நிலையில், மெஸ்ஸி தற்போது ஹாட்ரிக் கோல் அடித்து, 16கோல்களுடன் முதல் இடத்தை பிடித்துள்ளார். இனி ஒரு கோல் அடித்தாலும், கோல்ஸேவை பின்னுக்கு தள்ளிவிடுவார்.

மெஸ்ஸி, உலகக் கோப்பையில் முதல் கோலை அடித்ததுன் இதே நாளில்தான். 2006ஆம் ஆண்டில், ஜூன் 16ஆம் தேதி செர்பியா அணிக்கு எதிராக முதல் கோலை அடித்திருந்தார். தற்போது, அதே நாளில் ஹாட்ரிக் கோல் அடித்து, வரலாற்று சாதனையை படைத்துள்ளார்.

முதல் போட்டியிலேயே மெஸ்ஸி ஹாட்ரிக் கோல் அடித்திருப்பதால், நடப்பு சீசனில் மெஸ்ஸி மீது பெரிய எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. மெஸ்ஸிக்கு இதுதான் கடைசி உலகக் கோப்பை தொடர் என்பதால், இவர் நடப்பு சீசனில், அணிக்கு கோப்பையை வென்றுகொடுத்து, தொடர்ச்சியாக இரண்டு முறை, உலகக் கோப்பை வென்று கொடுத்த வீரராக மெஸ்ஸி இருக்க வேண் டும் என்பதுதான் ரசிகர்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

இதற்குமுன், கடந்த கால்பந்து உலகக் கோப்பை தொடரின் இறுதிப் போட்டியில், பிரான்ஸ் அணிக்கு எதிராக விளையாடி 33 என சமநிலை அடைந்து, பினால்டி ஷூட் முறையில் 42 என்ற கணக்கில் அர்ஜெண்டினா வென்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# சீதைக்கு சுருட்ட முடினு ராமாயண வரலாற்றில் இல்லையே: சாய் பல்லவி குறித்து தீபிகா சிக்லியா





சீதைக்கு சுருட்டை முடி இருப்பதாக ராமாயணத்தில் குறிப்பிடவில்லை என்று தெரிவித்துள்ளார் நடிகை தீபிகா சிக்லியா. ராமாயணா படத்தில் சீதையாக வரும் சாய் பல்லவிக்கு சுருட்டை முடி இருக்கும் நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தீபிகா கருத்து: ராமானந்த் சாகரின் ராமாயண் தொலைக்காட்சி தொடரில் சீதையாக நடித்தவர் தீபிகா சிக்லியா. அவர் பல படங்கள், சீரியல்களில் நடித்த போதிலும் இன்று வரை அவரை சீதையாகவே பார்க்கிறார்கள் மக்கள். தூர்தர்ஷனில் ஒளிப்பரப்பான ராமாயண் சீரியலை 80ஸ் கிட்ஸுகள் முதல் 2கே கிட்ஸுகள் வரை பார்த்திருக்கிறார்கள். சீதை என்றால் அது தீபிகா தான் என ரசிகர்கள் ஃபிக்ஸ் ஆகிவிட்டார்கள்.

இந்நிலையில் நிதேஷ் திவாரி இயக்கியிருக்கும் ராமாயணா படத்தில் சீதா கதாபாத்திரம் ஏற்றிருக்கிறார் சாய் பல்லவி. சீதா குறித்து ஒரிஜினல் சீதாவான தீபிகா கூறியிருப்பதாவது, நான் சாய் பல்லவி நடித்த படங்களை பார்த்திருக்கிறேன். அவர் ஒரு அற்புதமான நடிகை. ஆனால் அவர் சீதாவாக எப்படி இருப்பார் என எனக்கு தெரியவில்லை. படம் பார்த்தால் தெரிந்துவிடும். துளசிதாஸின் ராமாயணத்தில் சீதா என்றால் அவரின் கண்கள் இப்படி இருக்கும், உயரம் இவ்வளவு, முடி இப்படி என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி தான் ராமானந்த் சாகர் சீதாவை தேடி என்னை கண்டுபிடித்தார்.

முடி விபரம்: ராமாயணா படத்தில் நடித்திருக்கும் அனைவரும் சிறந்த கலைஞர்கள். அவர்கள் அந்த கதாபாத்திரங்களுக்கு பொருத்தமாக இருந்தால் நல்லது தான். மக்கள் என் நிஜ பெயரை மறந்தாலும் சீதா கதாபாத்திரத்தை மறக்காமல் என்னை சீதா என்று அழைக்கிறார்கள். கொரோனா வைரஸ் பிரச்சனை சமயத்தில் தூர்தர்ஷனில் எங்கள் ராமாயண் சீரியலை ஒளிபரப்பியதால் புதிய தலைமுறையினரும் பார்த்திருக்கிறார்கள். அதனால் அந்த நினைவை மாற்ற முடியாது. ராமாயணத்தில் சுருட்டை முடி கொண்டவர் சீதா என்று இல்லை என்றார்.

ரசிகர்கள் கொண்டாடும் ராமாயண் சீரியலில் ராமராக நடித்த அருண் கோவில், ராமாயணா படத்தில் தசரதராக நடித்திருக்கிறார். ராமாயணா படம் இரண்டு பாகங்களாக வெளியாகவிருக்கிறது. முதல் பாகம் வரும் நவம்பர் மாதம் ரிலீஸாகிறது.

தொடரும் விமர்சனங்கள்: ராமராக நடித்திருக்கும் ரன்பிர் கபூரை விட சீதாவாக நடித்திருக்கும் சாய் பல்லவியை தான் அவ்வப்போது சமூக வலைதளங்களில் விமர்சிக்கிறார்கள். முன்னதாக ஏக் தின் பட விழாவில் சாய் பல்லவி இந்தியில் பேசிய விதத்தை பார்த்துவிட்டு மொழி தெரியாத இவரை ஏன் சீதாவாக தேர்வு செய்தார்கள் என்று பாலிவுட் ரசிகர்கள் விமர்சித்தார்கள்.

மேலும் மண்டோதரியாக அழகான காஜல் அகர்வால் இருக்கும்போது ராவணன் எதற்காக சுமாரான சாய் பல்லவியை கடத்துவார் என்று கிண்டல் செய்தார்கள். இந்நிலையில் சுருட்டை முடி குறித்து ஒரிஜினல் சீதா சொன்னதை கேட்டதும் ராமாயணாவில் சாய் பல்லவியை நடிக்க வைத்திருக்கவே கூடாது. அவரை பார்த்தால் சீதா ஃபீலே வரவில்லை என்கிறார்கள்.

ராமாயணா படம் வந்தால் தானே சாய் பல்லவி சீதாவாக எப்படி நடித்திருக்கிறார் என்பதை சொல்ல முடியும். அப்படி இருக்கும் போது ரிலீஸுக்கு முன்பே அவரை அவ்வப்போது விமர்சிப்பது சரியல்லவே. ஒருவரின் திறமையை பாராட்டாவிட்டாலும் உருவத்தை வைத்து மோசமாக பேசுவது சரியான செயல் இல்லை.

# சபாநாயகருடன் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றய மாநிலத் தலைவர் சந்திப்பு

## கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார்



மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகருடன் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய TNGOU மாநிலத் தலைவர் V. மகேந்திரகுமார் சந்தித்தார். இச்சந்திப்பில் சட்டப்பேரவை தலைவர் வாயிலாக முதலமைச்சருக்கு கீழ்க்கண்ட கோரிக்கைகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழக வெற்றிக்கழக அரசு பொறுப்பேற்றவுடன் இரண்டு சதவீதம் அகவிலைப்படி உயர்வு, தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தில் இடைக்கால நிவாரண விதிமுறைகள், டாஸ்மார்க் பணியாளர்களுக்கு 25% ஊதிய உயர்வு, சத்துணவு அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஓய்வூதியம் உயர்த்தி வழங்கிய அரசாணை வெளியிட்டது உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுத்த அமைச்சருக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியையும் சிறப்பாக சட்டமன்றத் தேர்தலை நடத்தும் சபாநாயகருக்கு வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டது.

கோரிக்கைகள் விவரம் வருமாறு:

1. அனைத்து துறைகளிலும் சிக்கன செலவின கமிட்டி மூலம் குறைக்கப்பட்ட காலிப் பணியிடங்களை மீண்டும் விடுவித்து முழுமையான காலிப் பணியிடங்களை உடனடியாக அரசு நிரப்ப வேண்டும்.

2. பழைய ஓய்வூதிய திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

3. தினக்கூலி அத்துக்கூலி புற ஆதார முறையில் உள்ள பணியாளர்களை தொகுப்பூதிய பணியாளர்களாகவும், தொகுப்பூதியம், சிறப்பு கால முறை ஊதியத்தில் பணிபுரியும் பணியாளர்களை காலமுறை ஊதியத்திலும் அரசு பணி அமர்த்த வேண்டும்.

4. அம்மா உணவகப் பணியாளர்கள் போல பணிபுரியும் பல்வேறு நிலையில் உள்ள பணியாளர்களுக்கு அனைத்து தினக்கூலி பணியாளர்களையும் ஒரே விதமாக சரிசமமாக இருக்கும் சம்பள விகிதத்தில் பணியமர்த்த வேண்டும்.

5. மாநில அரசு அரசு அலுவலர்கள் ஆசிரியர்கள் அனைத்து நிலை பணியாளர்களின் காவலராக திகழ்ந்த தானைத் தலைவர் சிவ இளங்கோ அவர்களுக்கு மணிமண்டபமும் முழு உருவச் சிலையும் அமைத்து தர வேண்டும்.

6. தமிழ்நாடு அரசில் பணிபுரியும் அனைத்து நிலை அரசு அலுவலர்கள் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து நிலை பணியாளர்களுக்கும் 8 வது ஊதிய குழுவை உடனடியாக வருகின்ற சட்டப் பேரவை கூட்டத்தில் அறிவிப்பு வெளியிட்டு நிறைவேற்றித் தர வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வழங்கப்பட்டதுடன் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் நாட் குறிப்பேடும் வழங்கப்பட்டது

இந்நிகழ்வில் ஒன்றியத்தின் துணைத் தலைவர் பிஜே ரவிக்குமார், இணைப்புச் சங்கத் தலைவர்கள் தங்கத்துரை, மாரிமுத்து, அன்பழகன், இணைப்புச் சங்க நிர்வாகிகள் கிருஷ்ணன், நஞ்சையன், பழ.சுப்பிரமணியம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்' அப்பொழுது அனைவருக்கும் மாண்புமிகு சபாநாயகர் வாழ்த்து தெரிவித்ததுடன் சட்டப்பேரவை கூட்டத்தில் நிறைவேற்றக்கூடிய கோரிக்கைகளை முதலமைச்சர் வாயிலாக நிறைவேற்றதற்கு பரிந்துரைக்கப்படும் என உறுதி அளித்துள்ளார்.

# ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு முகமையின் கீழ் மேற்கொள்ளப்படும் மேம்பாட்டுப் பணிகள்



ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம் பாட்டு முகமையின் கீழ் மேற்கொள் ளப்படும் மேம்பாட்டுப் பணிகள் குறித்து மத்திய அமைச்சர் ஜூவல் ஓரம் நாடாளுமன்றத்தில் விளக்கம் அளித்துள்ளார்.

மத்திய அரசு, பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகம், பிற துறைசார் அமைச்சகங்களின் பல்வேறு திட்டங்கள் மூலம் பழங்குடியினர் மேம்பாட்டு முகமை பல்வேறு பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. அரசியலமைப்பின் 275(1) பிரிவின் கீழ் வழங்கப்படும் மானியங்கள், பிரதமரின் ஆதி ஆதர்ஷ் கிராம யோஜனா, பழங்குடியினர் துணைத் திட்ட ஆதரவு, பிரதமரின் ஜன்மன், ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகள், கல்வி உதவித்தொகை திட்டங்கள், பழங்குடியினர் வாழ்வாதார திட்டங்கள் உள்ளிட்டவற்றின் கீழ் உதவிகள் வழங்கப்படுகிறது.கல்வி, சுகாதாரம், விவசாயம், உள்கட்டமைப்பு போன்ற துறைகளில் உள்ள முக்கிய இடைவெளிகளை நிரப்புவதற்காக 275(1) பிரிவின் கீழ் மானியங்கள் வழங்கப்படுகின்றன. இந்தத் தலையீடுகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கான முக்கிய கள அளவிலான நிறுவனங்களாக பழங்குடியினர் மேம்பாட்டு முகமைகள்/பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுகின்றன.

மேற்கூறிய திட்டங்களின் கீழ் உள்ள நிதிகள், ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாக அல்லாமல், பொதுவாக மாநில வாரியாகவும் திட்ட வாரியாகவும் ஒதுக்கப்பட்டு விடுவிக்கப்படுகின்றன.

பிரதமரின் ஆதி ஆதர்ஷ் கிராம யோஜனா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 167 கிராமங்கள் உள்ளன. இவற்றில் 157 திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. 2025 26ம் நிதியாண்டுக்கு இந்த கிராமங்களுக்கு விடுவிக்கப்பட்ட நிதி 6.6244 கோடி ரூபாயாகும்.

# திருநங்கையை காதலித்து மணந்த ஐ.டி. ஊழியர்



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி அருகே உள்ள மோரை பகுதியைச் சேர்ந்தவர் பிரவீன்ராஜ். 30 வயதாகும் இவர் சென்னையில் உள்ள ஒரு பிரபல தனியார் நிறுவனத்தில் ஐடி ஊழியராக வேலை பார்த்து வருகிறார்.

இவருக்கும், நாமக்கல் மாவட்டம் திருச் செங்கோடு அருகே உள்ள வருகூராம்பட்டியைச் சேர்ந்த 28 வயதான கயல்விழி என்ற திருநங்கைக்கும் இடையே காதல் மலர்ந்துள்ளது.. சோஷியல் மிடியா வில் இருவரும் அறிமுகமாகி பழகி வந்துள்ளனர்.

பாலின தடைகளை தாண்டி இருவரும் ஒருவரையொருவர் உயிருக்குயிராக காதலித்து வந்தனர். பிரவீன் ராஜ் வீட்டிற்கு தெரியவந்ததுமே பயங்கரமாக அதிர்ச்சி அடைந்தனர். திருநங்கையைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று கூறினர். பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி, இருவரும் திருச்செங்கோட்டில் உள்ள ஒரு கோயிலில் திருமணம் செய்து கொண்டனர். திருமணத்திற்கு பிறகு, இருவரும் தங்களது பணிகளை தொடர சென்றனர்.

இதையடுத்து சென்னையில் செயல்பட்டு வரும் ஒரு தனியார் போதை மறுவாழ்வு மையத்தில் பிரவீன்ராஜை அவரது பெற்றோர் வலுக்கட்டாயமாக சேர்த்தனர். சில மாதங்கள் அங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்த பிரவீன்ராஜ், வெளி உலகத்துடனான தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டு மன உளைச்சலுக்கு ஆளாக்கப்பட்டார்.

சட்ட உதவி மையத்தில் காதல் ஜோடி தஞ்சம்பிறகு கடந்த மே மாதம் பிரவீன்ராஜை போதை மறுவாழ்வு மையத்திலிருந்து அழைத்து வந்த பெற்றோர், அவருக்கு வேறு ஒரு பெண்ணுடன் திருமணம் செய்து வைக்க, அவசரமான ஏற்பாடுகளை செய்தார்கள்,

காதலி கயல்விழியை தொடர்புகொண்டு நிலைமையை விளக்கினார். பெற்றோரின் கட்டாய திருமண கெடுபிடிகளில் இருந்து தப்பிக்க வேண்டுமானால், வீட்டு விட்டு வெளியேறி திருமணம் செய்ய வேண்டும் என்று தன்னுடைய முடிவை சொன்னார்.. கயல்விழியும் இதற்கு சம்மதம் தெரிவித்தார்.. அதன்படியே, பிரவீன்ராஜும் கயல்விழியும், உடனடியாக வீட்டை விட்டு வெளியேறி, ஈரோடு மாவட்டம் கோபி செட்டி பாளையத்தில் இயங்கி வரும் மனித சட்ட உதவி மையத்தில் தஞ்சமடைந்தனர்,.

அங்குள்ள அமைப்பின் நிர்வாகிகளிடம் தங்களின் காதல் கதையையும், குடும்பத்தினரால் ஏற்பட்ட அச்சுறுத்தல்களையும் எடுத்து சொல்லி, உதவி செய்யுமாறு கேட்டார்கள்.. இருவரின் உண்மையான அன்பையும் புரிந்துகொண்ட சட்ட உதவி மைய நிர்வாகிகள், அவர்க ளுக்கு முறைப்படி திருமணம் நடத்தி வைக்க முன்வந்தனர். இதனைத் தொடர்ந்து, கோபிசெட்டிபாளையத்தில் உள்ள மனித சட்ட உதவி மையத்தின் நிர்வாகிகள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் முன்னிலையில், பிரவீன்ராஜ் கயல்விழி ஜோடி மாலை மாற்றி, தாலி கட்டி சுயமரியாதை முறையில் பதிவுத் திருமணம் செய்து கொண்டார்கள்.

நெகிழ்ச்சி தருணம் பெற்றோர் போதை மறுவாழ்வு மையத்தில் அடைத்து வைத்த போதிலும், கட்டாயத் திருமண ஏற்பாடுகளை மீறி ஈரோட்டில் ஐ.டி. ஊழியர் திருநங்கையைக் கரம் பிடித்த இந்தச் சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பையும் நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

# 30 ஆண்டுகளில் தமிழர்களின் DNA-வே அழியும்: எச்சரிக்கும் சுகாதாரத் துறை நிபுணர்



இன்னும் 30 ஆண்டுகள் மதுகுடித்தால் தமிழர்களின் டிஎன்ஏவே அழியும், மதுவை ஒழிப்பதே முழு தீர்வு என பொது சுகாதார நிபுணர் குழந்தைசாமி அதிர்ச்சியான ஒரு தகவலை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் ஒரு நிகழ்ச்சியில் கூறியிருப்பதாவது: 1971 ஆம் ஆண்டு மதுவிலக்கு தமிழகத்தில் விலக்கிக் கொள்ளப்பட்டது. அன்று முதல் இன்று வரை 2 தலைமுறைகளாக தமிழர்கள் மதுவை குடிக்கிறார்கள்.

அவர்களுக்கு பிறந்த குழந்தைகளின் ஜீனிலும் பாதிப்பு இருக்கிறது. தொடர்ந்து 3ஆவது தலைமுறையும் மதுவை குடித்தால் குழந்தைகள் பிறக்கும் போதே மதுவுக்கு அடிமையாக பிறக்க வாய்ப்பிருக்கிறது. ஆரோக்கியமாக இருந்த தமிழர்களின் டிஎன்ஏ மாற்றம் அடைந்து பேரிடர் உருவாகும். இன்னும் தொடர்ந்து குடித்தால் அடுத்த 30 ஆண்டுகளில் தமிழ்ச் சமூகமே அழிந்துவிடும். மதுவை ஒழிப்பதே முழு தீர்வு என தெரிவித்துள்ளார். 1971 ஆம் ஆண்டு தமிழகத்தில் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டது. இதையடுத்து 1983 ஆம் ஆண்டு டாஸ்மாக் உருவாக்கப்பட்டு மது விற்பனையை அரசே நேரடியாக கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டது.

இந்த டாஸ்மாக் மதுவிற்பனையால் அரசுக்கு வருமானம் கிடைத்தாலும் இதனால் பல குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வந்துவிடுகின்றன. பல குழந்தைகள் தந்தை, தாய் இல்லாமலும் பல மனைவிகள் கணவன்மார்கள் இல்லாமல் விதவையாகவும் இருக்கும் நிலை ஏற்படுகிறது.

குடித்துவிட்டு ஆங்காங்கே குடிமகன்கள் விழுந்து கிடப்பதும், அவ்வழியாக போவோர் வருவோரை கிண்டல் செய்வதும், அசுத்தம் செய்வதும், கட்டிய மனைவிக்கும் பெற்ற பிள்ளைகளுக்கும் அவமானத்தை ஏற்படுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள். இதனால்தான் டாஸ்மாக் மதுபான கடைகளை மூட பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். அதிலும் பள்ளி, கல்லூரிகளுக்கு அருகே இருக்கும் கடைகளையும் குடியிருப்புகளுக்கு அருக இருக்கும் கடைகளையும் நீக்குமாறு பெண்கள் பலவகையான போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். எல்லாவற்றையும் விட மது போதை, பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களையும், கொலை, கொள்ளை செய்யவும் உந்துகிறது என்பதால்தான் இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்புகிறது.

மதுபானங்களுக்கு பதிலாக மாற்று வருவாய்களை தேடவும் நீதிமன்றங்கள் உத்தரவிட்டிருந்த நிலையில் தற்போது தவெக அரசு பொறுப்பேற்று தற்போது 700 க்கும் மேற்பட்ட மதுபான கடைகளை மூடிவிட்டதாக சொல்லப்படுகிறது. இந்த நிலையில் தமிழகத்தில் உள்ள மற்ற கடைகளையும் மூடுமாறு கோரிக்கைகள் எழுந்துள்ள நிலையில் தற்போது குழந்தைசாமி கூறியுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# பெண்களுக்கு எதிரான பாலியல் வழக்குகளை 2 மாதங்களில் முடிக்க ஐகோர்ட் அதிரடி உத்தரவு!



பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை 2 மாதங்களில் முடிக்க அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும் என அனைத்து முதன்மை அமர்வு நீதிமன்றங்களுக்கும், மகளிர் சிறப்பு நீதிமன்றங்களுக்கும் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட குழந்தையிடம் 30 நாளில் வாக்குமூலம் பதிவு செய்து ஓராண்டில் போக்சோ வழக்கு விசாரணையை முடிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

திருவண்ணாமலைக்கு சாமி தரிசனம் செய்ய வந்த ஆந்திராவை சேர்ந்த பெண்ணை, பாலியல் வன்கொடுமை செய்ததாக திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்தை சேர்ந்த காவலர்கள் சுந்தர், சுரேஷ் ராஜ் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விரைந்து விசாரிக்க கோரியும், போக்சோ மற்றும் மகளிர் சிறப்பு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரங்களை தெரிவிக்க உத்தரவிடக் கோரியும், பாதிக்கப்பட்ட பெண் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது வழக்கை விசாரித்த நீதிபதிகள், பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை 2 மாதங்களில் முடிக்க அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும் என அனைத்து முதன்மை அமர்வு நீதிமன்றங்களுக்கும், மகளிர் சிறப்பு நீதிமன்றங்களுக்கும் உத்தரவிட்டனர். மேலும், "பெண்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய காவல்துறையே வேட்டைக்காரர்களாக மாறும் நிகழ்வுகள் தமிழகத்தில் மீண்டும் நடைபெறவில்லை என்பதை அரசு உறுதி செய்ய வேண்டும். காவல்துறை அதிகார துஷ்பிரயோகத்தை தடுக்க, இரவு ரோந்து பணிகளை ஆண்டுதோறும் மறு ஆய்வு செய்ய வேண்டும்" என தமிழக டிஜிபிக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

தொடர்ந்து, "பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்ற வழக்குகளின் விசாரணையை தேவையில்லாமல் தள்ளிவைக்க கூடாது என அனைத்து நீதிமன்றங்களுக்கும், சுற்றறிக்கை பிறப்பிக்க வேண்டும்" என சென்னை உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். அதேபோல, போக்சோ வழக்குகளில், வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட 30 நாட்களில் பாதிக்கப்பட்ட குழந்தையிடம் வாக்குமூலம் பதிவு செய்து, ஓராண்டில் விசாரணையை முடிக்க வேண்டும் என போக்சோ சிறப்பு நீதிமன்றங்களுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், போக்சோ சிறப்பு நீதிமன்ற நீதிபதிகளுக்கு சிறப்பு பயிற்சி வழங்க வேண்டும் என மாநில நீதித்துறை பயிற்சியகத்துக்கு உத்தரவிட்டனர். மேலும், போக்சோ வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு அதிரடிப்படையை அனைத்து மாவட்டங்களிலும் அமைக்க வேண்டும் என டிஜிபிக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், கடலூர், திண்டுக்கல், மதுரை மற்றும் தூத்துக்குடியில் போக்சோ சிறப்பு நீதிமன்றங்களில் காலியாக உள்ள நீதிபதிகள் பதவிகளை விரைந்து நிரப்ப வேண்டும் என்றும் உத்தரவிட்டனர்.

மேலும், மாநிலம் முழுவதும் 6 புதிய சிறப்பு நீதிமன்றங்களை துவங்குவது குறித்து விரைந்து முடிவெடுக்க வேண்டும். அதன் முன்னேற்றம் குறித்து இரண்டு மாதங்களில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என தலைமைப் பதிவாளருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.






Prinded by **A.IRUDHAYARAJ**, Prinded at **CHENNAI OFFSET PRINTING** # 19/1,21\2 Kitaath Khan Bahadur Street, Ellis Road, Chennai-600002 Published from 445, Godhamedu, Saidapet, Chennai-600015 Editor: **A.IRUDHAYARAJ** Mobile No.9884183663 Office No: 9499044100 Email:thagavalexpress2021@gmail.com